விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | மாசி 06 சனிக்கிழமை (18.02.2006) | தொலைபேசி 222 3378 | ஒலி 61

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து







# தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் கட்டுநாயக்கவிலிருந்து ஜெனீவா பயணம்

## பாலா தம்பதியர் இன்று புறப்படுவர்

(கிளிநொச்சி)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சில் கலந்து கொள்வதற்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து ஜெனீவாவுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

முன்னதாக நேற்றுக்காலை 10 மணியளவில் அவர்கள் கிளிநொச்சியில் இருந்து விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் கட்டுநாயக்க விமானநிலையத்தை சென்றடைந்தனர். அங்கிருந்து நேற்றுப் பிற்பகல் 4.15 மணியளவில் ஜெனீவாவுக்குப் புறப்பட்டனர். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளின் வருகையையொட்டி கட்டுநாயக்க விமானநிலையத்தில் பாரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னம்மானின் நினைவுநிகழ்வில் தலைவர் பிரபாகரன் பங்கேற்றார்



தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள், மூத்த தளபதி லெப்.கேணல் பொன்னம்மானின் 19 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நிகழ்வில் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த ஒப்பந்த நடைமுறையே

# யுத்த நிறுத்த ஒப்பந்த நடைமுறையே ஜெனீவாப் பேச்சின் கருப்பொருள்

## ஜெனீவா புறப்படுமுன் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தான் ஜெனீவாப் பேச்சுக்களின் முக்கிய கருப்பொருளாக இருக்குமென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஜெனீவா நோக்கிச்செல்லும் முன்னதாக கிளிநொச்சியில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனீவாப் பேச்சுக்கள் என்பது முழுக்கமுழுக்க ஒரு யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துவது



தொடர்பான பேச்சுக்கள் தான். எங்கள் மக்கள் மீது தொடுக்கப்பட்டிருக்கின்ற இராணுவ ஆக்கிரமிப்பு,இராணுவ அச்சுறுத்தல்கள் ,இராணுவ கெடுபிடிகள், கொலைகள்,ஆட்கடத்தல்கள் ,தமிழ்மக்களை அச்சுறுத்தி வெளியேற்றுதல் போன்ற கெடுபிடிகளுக்கு தீர்வு கண்டு யுத்த நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவது பற்றி பேச்சுக்களில் இடம்பெறவுள்ள விடயங்களாக உள்ளன.

ஆகவே சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பை ,முயற்சியை நாம் மதித்து நாம்ஜெனீவாப்பேச்சில் கலந்து கொள்கின்றோம்.

சிறிலங்கா அரசு நிலைப்பாடுகளை உணர்ந்துகொண்டு எமது மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்ற இராணுவ ஆக்கிரமிப்பை இராணுவ வன்முறை ,இராணுவ நெருக்குவாரங்களை இல்லாமல் செய்து எமது (12 ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்தவின் சிந்தனையின் அடிப்படையில்தான் ஜெனீவாவில் பேச்சுவார்த்தை இடம்பெறும்!

## ஜே.வி.பியிடம் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுக்கள் மகிந்த சிந்தனையின் அடிப்படையில்தான் நடைபெறும் என்று ஜே.வி.பிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலரி மாளிகையில் ஜே.வி.பி. குழு ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியபோது இவ்வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கக் குழுவில் ஜனாதிபதியின் சட்டத்தரணி எச்.எக்.டி. சில்வா, (12 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு போராளிகள் விடுதலை! இரு பொலிஸார் இன்று விடுதலை?

(திருகோணமலை)

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் 4 போராளிகளை திருகோணமலை நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

2005 ஆம் ஆண்டு திருகோணமலையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட எஸ்.சண்முகராஜ், சேவியர் ரஞ்சித்,எஸ்.விஜயகுமார்,லக்ஸ்மணன் அரவிந்தன் ஆகிய போராளிகளே நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

நான்கு போராளிகள் மீதான வழக்கு நேற்று திருகோணமலை நீதிபதி வி.ராமகலன் முன்னிலையில் விசார (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.




எக்ஸ்போ எயார்



வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாட்டை முன்னேற்றுவதற்கு ஆக்கபூர்வ சிந்தனை அவசியம்

நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால், ஆக்க பூர்வமான சிந்தனைகள் அவசியமானவை என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

உதவி வகிக்கும் பெரும்பாலானோரின் மத்தியில் ஆக்க பூர்வமான சிந்தனை போதியதாக இல்லாததால், சமூகத்தில் சகல பிரிவுகளிலும் பிரச்சினையும், சிக்கலான நிலையும் ஏற்பட்டுள்ளதென்று தெரிவித்த அவர்-இத்தகைய பிரச்சினைக்கு இந்தியா வெற்றிகரமாகத் தீர்வு கண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பாடசாலைகள் மட்டத்திலான இலக்கிய மாநாட்டின் போது உரை நிகழ்த்துகையிலேயே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

8 மாகாணங்களைச் சேர்ந்த 45 சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல மாணவர்கள் இதில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (த-7)

## இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்க வட-கிழக்கில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர் யுவதிகளின் நலன் கருதி தொழில் மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான பயிற்சிகளை வழங்கும் பொருட்டு தனியான பல்கலைக்கழகமொன்று உருவாக்கப்படவுள்ளதாக தொழில் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இரத்மாலானையில் அமைந்துள்ள தேசிய தொழில்பயிற்சி கல்வி நிறுவகத்துடன் இணைந்ததாக இதற்கான கட்டட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தொழில் நுட்பத் துறை, கைத்தொழில் மற்றும் தொழிற்பயிற்சி ஆகிய மூன்று பீடங்களைக் கொண்டதாக இப் பல்கலைக்கழகம் உருவாக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறத்தவறும் இளைஞர், யுவதிகள் இப்பல்கலைக்கழகத் தில் இணைத்துக்கொள்ளப்பட்டு உரிய தொழில் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன. (த-9)

## யானைகள் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் யானைகளின் பிறப்பு வீதம் அதிகரித்து வருவதனால், பெரும் சிக்கல் எதிர்நோக்கப்படுவதாக சுற்றாடல் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன தெரிவித்தார்.

யானைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின்படி அவற்றை வெளிநாடுகளுக்கு வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

காடுகளுக்கு நடுவில் படையினரும், புலிகளும் பயிற்சி முகாம்களை அமைத்திருப்பதனால் யானைகள் மட்டுமன்றி, ஏனைய மிருகங்களும் காடுகளுக்குள் இருந்து வெளியே வருவதாகக்குறிப்பிட்டார்.

யானைகளைப் பாதுகாப்பதற்கும், அவற்றிடம் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-7)

## தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கை அவதிக்குள்ளாகும் அரச அலுவலர்கள்

(கொழும்பு)

சமுர்த்தி அதிகாரசபை தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகளையும் கடிதங்களையும், பிரதேச செயலகங்களுக்கும் மாவட்ட செயலகங்களுக்கும், சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் அனுப்பி வைக்கும் காரணத்தினால்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் அவதிக்குள்ளாகின்றனர். வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பிரதேச செயலகங்களுக்கும் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும், இலங்கை சமுர்த்தி அதிகார சபையினரால் ஆங்கில தமிழ் மொழி பெயர்ப்பின்றி தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகளும், கடிதங்களும் அனுப்பிவைக்கப் படுகின்றது.

இதனால், இந்த சுற்றறிக்கைகளுக்கும் கடிதங்களுக்கும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் உத்தியோகத்தர்கள் அவதிப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் சிங்கள மொழிகளில் தேர்ச்சி பெற்ற பல உத்தியோகத்தர்கள் அலுவலகங்களில் கடமையாற்றினார்கள்.

தற்போது சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்ற அலுவலர்களை தேடித்திரிந்து மொழி பெயர்ப்புச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-9)

## கடமையாற்றும் பிரிவுகளிலேயே கிராம சேவையாளர்களுக்கு வீடுகள்

(யாழ்ப்பாணம்)

சகல கிராம சேவையாளர்களுக்கும் அவர்கள் கடமையாற்றும் கிராம சேவகர் பிரிவில் வீடுகளை கட்டிக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் படி அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதன் முற்கட்டமாக கடமையாற்றும் பிரிவிற்குள் உத்தியோகபூர்வ வீடுகள் இல்லாத கிராம சேவையாளர்களின் பெயர் விபரங்களை திரட்டுவதுடன் உத்தியோகபூர்வமான வீடு மற்றும் காரியாலயம் அமைப்பதற்கு தேவையான அரசாங்கக் காணிகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மாவட்ட செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

காணிகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை இரண்டு மாதத்திற்குள் முடித்துக்கொண்டு கட்டடங்களுக்கான வரைபடங்களை தயாரிக்கும்படி ஆலோசனை வழங்கியுள்ளார்.

கிராம சேவகர்கள் தாங்கள் கடமையாற்றும் பிரிவிற்குள் வசிக்காமையினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவசர தேவைக்காக கிராம சேவகர்களை தேடிச்செல்கின்ற போது கிராம சேவகர்கள் குறித்த இடங்களில் இருப்பதில்லை என்று அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிமாவட்டம் அல்லது வெளிப் பிரதேசங்களைச் சேர்ந்த கிராம சேவகர்களினால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளும் நோக்குடனேயே இந்தப் புதிய வேலைத்திட்டம் அறிமுகப்படுத்த விருப்பதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-2)

## இராசி பலன்

**18.02.2006**
**(மாசி 06 சனிக்கிழமை)**
**பஞ்சமி முன்னிரவு 7.34 மணிவரை**
**சித்திரை முன்னிரவு 9.10 மணிவரை**
**ராகுகாலம் 9.32-11.02 மணிவரை**
**சுபநேரம் 3.32-5.02 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, நல்ல வரவேற்பு, ஆரோக்கியம். |
| இடபம் | உடல்நலம், தடைப்பட்ட காரியம் கைகூடும், புரிந்துணர்வு, நல்ல செய்தி. |
| மிதுனம் | குடும்பசுகம், பூர்வ புண்ணிய கருமம், பணக்குறைவு, காரிய தாமதம். |
| கடகம் | மனச்சோர்வு, முயற்சி தாமதம், நண்பர்கள் சந்திப்பு, சிந்தனை மிகுதி. |
| சிங்கம் | கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, தெய்வசிந்தை. |
| கன்னி | செல்வாக்கு, பணவிரயம், வேலைச்சுமை, காரிய தாமதம். |
| துலாம் | நல்ல முயற்சி, புதிய தகவல், போசன சுகம், ஆழ்ந்த சிந்தை. |
| விருச்சிகம் | பிரயாணம், சுபசெலவு, மாதர்நட்பு, நண்பர்கள் உதவி. |
| தனுசு | எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி, உறவினர் சந்திப்பு, பொருள் சேர்க்கை. |
| மகரம் | உஷ்ண நிலை, கடின முயற்சி, மேன்மை, நல்ல செய்தி. |
| கும்பம் | தந்தை வழி உறவு, கட்டுப்பாடு, வீண் பேச்சு, காரிய தாமதம். |
| மீனம் | சுபகீர்த்தி, காரிய தடங்கல், வாகன பயம், போசன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## சீரற்ற மின் விநியோகத்தால் பாவனையாளர்கள் பாதிப்பு

தீவகம்வடக்கு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள தம்பாட்டி கிராம மக்களுக்கு வழங்கப்படும் மின் விநியோகம் சீரற்றமுறையில் இருப்பதால் பாடசாலைச் சிறார்கள், தொழிற்சாலை ஊழியர்கள், கடலுணவு பதனிடும் சாலைகள் மிகவும் பாதிக்கப்படுதாகத் தெரியவருகின்றது.

காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும் பின்பு மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணிவரை மின் விநியோகம் நடைபெற்ற போதிலும் இடையில் மின்பிறப்பாக்கி இயங்காததால் மின் விநியோகம் தடைப்பட்டுவருவதாக தெரிய வருகின்றது. (த-72)

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

கோப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய்க்கெதிரான தடைமருந்து ஊசி இன்று கோப்பாய் வடக்கு, கோப்பாய் மத்தி ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 20 ம் திகதி கோப்பாய் தெற்கு, இருபாலை கல்வியங்காடு ஆகிய பகுதிகளிலும் இலவசமாக ஏற்றப்படவிருக்கின்றது. (த)

## கொள்கைகளை நடைமுறைப்படுத்த அமைச்சுக்களுக்கு ஆலோசனை

மஹிந்தவின் சிந்தனையில் குறிப்பிடப்பட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் ஏற்கனவே அமைச்சுக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 6 வருடகாலத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் முதல் மூன்றுமாத காலப்பகுதிக்கான செயல்திட்டங்கள் இவ்வாறு அமைச்சுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏதாவது சிக்கல்கள் தோன்றினால் அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் தயாராக இருப்பதாக திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பின்னடைவு கண்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதற்கு திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு ஆலோசனைகளை வழங்கும். செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் விதம் பற்றி மக்களுக்கு விளக்கமளிக்க அமைச்சு உத்தேசித்துள்ளது. குறிப்பிட்ட செயல்திட்டங்களின் பிரதி பலன்களை மிக விரைவில் பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் கையளிப்பு

(பலாலி)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கென தென் பகுதியிலுள்ள நன் கொடையாளர்களால் வழக்கப்பட்ட 4 சைக்கிள்கள், நேற்று முன்தினம் காலை யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் தளபதியின் வழிகாட்டலுக்கமைய 515ஆவது படையினரால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்வின்போது அப்பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.இராணுவத் தளபதிக்குப்பதிலாக 515ஆவது கட்டளை அதிகாரி, யாழ்.பொது மக்கள் தொடர்பு அதிகாரி, கல்லூரி அதிபர், ஆசிரிய குழுவினர் முதலியோர் கலந்துகொண்டனர். (து)

## ஜனாதிபதியின் சமாதான முயற்சிகள் பாராட்டுதற்குரியது

### சட்டத்தரணி குணசேகர

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலம் நாட்டின் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுக்கும் முயற்சிகள் போற்றத்தக்கது என சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால அனுபவங்களை நன்கு ஆய்வு செய்து புதிய வழிமுறையை கையாண்டு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதன் மூலம் சிறந்த முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியும்.

நாட்டின் இறைமைக்கு பங்கம் ஏற்படாத வண்ணம் நிரந்தர சமுதாயத்தை நோக்காகக் கொண்டு இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது அரசாங்க தூதுக்குழுவின் கடமையாகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## பல்கலைக்கழக ஊழியர்சங்கம் அடையாள வேலை நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழக கல்விசார ஊழியர்களுக்கும் பல்கலைக்கழக துணைவேந்தருக்கும் இடையே நேரக் கணிப்புப் பொறிபாவிப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும்படி கோரி நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக் கழக ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேரக்கணிப்புப் பொறியை பல்கலைக்கழக பணியாளர்களில் ஒரு பகுதியினர் மட்டும் பயன் படுத்துவதை ஆட்சேபிக்கும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இதில் புகுத்தப்பட்டுள்ள கைரேகைத் தொழில் நுட்பம் வடக்கு- கிழக்கு பல்கலைக் கழகங்களில் மனித உரிமை மீறல்களுக்கே வழிவகுக்கும் எனச் சுட்டிக்காட்டுகின்றது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று முன்தினம் நடத்திய போராட்டத்தில் பாதுகாப்பு மற்றும் நீர் விநியோகப் பணிப்பாளர்கள் தவிர்ந்த சகலரும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-132,133)

# அனுபவமற்ற குழுவைப் பேச்சுக்கு அனுப்புவதன் உள்ளர்த்தம் என்ன?

# பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையம் எழுப்பும் கேள்வி

ஜெனீவா பேச்சுக்களுக்கு அனுபவமற்ற அரசாங்கக் குழுவை அனுப்புவது பேச்சுவார்த்தையை இழுத்தடிக்கவா? என்று பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையம் கேள்வி எழுப்பியுள்ளது.


இது தொடர்பில் தமிழர் மனித உரிமைகள் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுவதாவது,

'நான் தமிழர்களுடைய அபிப்பிராயத்தை பற்றி அக்கறைப்படவில்லை. தற்போது நாம் தமிழர்களைப் பற்றியோ, அவர்களுடைய உயிரைப்பற்றியோ, அபிப்பிராயத்தை பற்றியோ யோசிக்க முடியாது. எவ்வளவு அழுத்தத்தை வடக்குக்கு கொடுக்கிறோமோ, அது இங்குள்ள சிங்களவரை நன்றாக சந்தோஷப்படுத்தும். உண்மையில் நான் தமிழரை எவ்வளவு தூரம் பட்டினியடைய செய்கிறேனோ, அது சிங்கள மக்களை மிகவும் சந்தோஷமடையச் செய்யும்' என்று முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11ஆம் திகதி லண்டன் டெலிகிராப் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இலங்கைத் தீவுக்கு பிரித்தானியா







1948ஆம் ஆண்டு சுதந்திரத்தை கொடுக்கும்போது, தாங்கள் மற்றைய காலனித்துவ ஆட்சியாளர்ரான போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சி செய்யாது தமது நிர்வாகத்தை இலகுவாக நடத்துவதற்காக-தமிழர்களுக்கென தனியாக இருந்த அரசை சிங்கள அரசுகளுடன் இணைத்தோம் என்பதை மனதில் கொள்ளாது எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்களவரிடம் ஆட்சிப் பொறுப்பை கையளித்தனர் என்பது சரித்திரம்.

அப்போதிருந்த தமிழ் தலைவர்கள், சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை சம உரிமையுடன் இலங்கை தீவில் நடத்துவர் என்று எண்ணினார்கள். ஆனால் சுதந்திரம் கிடைத்த குறுகிய காலத்திலேயே இது பிழையான சிந்தனையென நிரூபிக்கப் பட்டுவிட்டது.

சிங்கள ஆட்சியாளர்கள் இனரீதியான பாகுபாட்டு அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிராக குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை, நிலவுரிமை போன்ற சட்டங்களை அமுல் செய்தனர். தமிழ் மக்களின் தாயகப் பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றியும், தமிழ் மக்களுக்கெதிரான இனக் கலவரங்களை தூண்டிவிட்டு தமிழ் இன அழிப்பு போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இவையே இலங்கைத் தீவின் இன்றைய நிலைக்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்தன.

1983ஆம் ஆண்டுவரை முப்பத்தைந்து வருடங்களாக தமிழ் மக்களினாலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள்-தமிழ் மக்களுக்கு இறப்பையும் பொருட்சேதத்தையும் தவிர வேறு எந்தவொரு பலனையும் கொடுக்கவில்லை. முப்பத்தைந்து வருடகால சாத்வீகப் போராட்டத்தால் சலிப்புற்ற தமிழ் மக்கள் தம்மை ஆயுதப் போராட்டத்திற்கு தயார் செய்து கொண்டனர்.

கடந்த 58 வருடகாலங்களில் பலபேச்சுவார்த்தைகள், தமிழ்த் தலைவர்களுக்கும் சிங்கள மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஆட்சிப் பொறுப்பில் உள்ள பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கு இடையில் நடைபெற்றுள்ளது.

1957ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ஆம் திகதி ஒரு தீர்வு உடன்படிக்கையும், 1965ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி மற்றுமோர் உடன்படிக்கையும் தமிழ் மக்கள் சார்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் பிரதமர்களான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க ஆகியோருக்கு இடையில் கைச்சாத்தாகியிருந்தது.

ஆனால் இவ்விரு உடன்படிக்கைகளும் கைச்சாத்தாகி சில நாட்களிலேயே சிங்கள மக்களின் குறிப்பாக பௌத்த பிக்குகள், எதிர்க்கட்சியினரின் பாரிய எதிர்ப்பு



காரணமாக சிங்களப் பிரதமர்களினால் உடன்படிக்கைகள் ஒருதலைப்பட்சமாக கிழித்து எறியப்பட்டன்.

அதே காலகட்டத்தில் 505 அப்பாவித் தமிழ் மக்கள் அரசியல் காரணங்களுக்காக இனக் கலவரங்களினால் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் மக்களின் சமூக பொருளாதார வளங்கள், சிங்கள் அரசினால் திட்டமிடப்பட்ட வன்முறைகளினால் சூறையாடப்பட்டன.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதினால் பெரும் தொகையான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டும், காணாமல் போயும், தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர்.

2002ஆம் ஆண்டு நோர்வே நாட்டின் அனுசரணையுடன் நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் முடிவுகளை சிறிலங்கா அரசு நடைமுறைப் படுத்தத் தவறிய காரணத்தினால் 2003 ஆம் ஆண்டு மே மாதம் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து மிகவும் மோசமான யுத்த நிறுத்த மீறல்களும், மனித உரிமை மீறல்களும் நடந்தேறின.

சிறிலங்காவின் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 47 படுகொலைகளும், 45 ஆட்கடத்தல்களும், 20 பேர் காணாமல் போனமையும் 9500 பேர் உள்நாட்டில் அகதிகளாக இடம்பெயர்ந்ததுமான சம்பவங்கள் இடம்பெற்றன. இதில் மாணவர்கள், பத்திரிகையாளர்கள், கல்விமான்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரும் அடங்குவர்.

கடந்த மார்கழி மாதம் 16ஆம் திகதி புங்குடுதீவு என்னும் கிராமத்தில் இருபது வயதுடைய இளையதம்பி தர்சினி என்னும் இளம்பெண் சிறிலங்கா கடற்படையினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மார்கழி 25ஆம் திகதி நத்தார் தினத்தன்று, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம், மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் இரவு நத்தார் பிரார்த்தனையில் கலந்துகொண்டபோது படுகொலை செய்யப்பட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஐந்து மாணவர்கள், திருகோணமலையில் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஜனவரி மாதம் 14 ஆம் திகதி மானிப்பாயில் வசித்து வந்த ஒரு தாயும் இரு மகள்மாரும் இரவில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பிலிருந்து வவுனியாவிற்கு பயணம் செய்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பத்து மனிதாபிமான பணியாளர்கள், ஜனவரி மாதம் 30ஆம் 31ஆம் திகதிகளில் வெலிகந்தை எனும் இடத்தில் இரு இராணுவ காவலரண்களுக்கிடையில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டனர். இன்றுவரை மூவர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மற்றையோர் பற்றி எவ்வித செய்தியும் கிடைக்கப்பெறவில்லை.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழுதாக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் வெலிகந்தை பகுதியிலிருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏழு மனிதாபிமான பணியாளர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இதுவே இலங்கைத் தீவில் ஓர் சுமுகமான நிலையை உருவாக்க உதவும்.

ஜெனீவாவில் அரச தரப்பில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவிருக்கும் குழுவினருக்கு பயிற்சியும், வகுப்புகளும் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றன. இச்செய்தி உண்மையாகவிருந்தால் 1994 ஆம் ஆண்டு முறிவடைந்த பேச்சுவார்த்தையைப் பற்றி சர்வதேச சமுதாயம் மிக கவனமாக ஆராயவேண்டியுள்ளது.

அரசாங்கம், பேச்சுவார்த்தைகளில் எவ்வித அக்கறையும் காட்டாது பேச்சுவார்த்தைகளுக்கு அரச மட்டத்தில் எந்தவித அந்தஸ்தும் பெறாதவர்களை அனுப்பி நேரத்தை இழுத்தடித்ததாக சந்தேகிக்கப்படுகிறது. இந்தச் சந்தேகம் உண்மையா? அல்லவா? என்பதை விரைவில் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பொலிஸாரும் தமக்கு இந்த ஆட்கடத்தல் பற்றியோ அல்லது மற்றைய இடங்களில்காணாமல்போனோர் பற்றியோ ஒன்றும் தெரியாது என கை விரித்துள்ளனர்.

சர்வதேச சமூகமும், ஜி-8 நாடுகளி



லிருந்து இயங்கும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இன்று தமிழர்கள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கு ஏதோவொரு முறையில் காரணமாக உள்ளனர்.

1983ஆம் ஆண்டு பகுதியில் தமிழ் மக்களுடைய மனித உரிமை மீறல்கள் உச்சக்கட்டத்தை அடைந்தபோது சர்வதேச சமூகம் இதற் கான மூல காரணங்களை ஆராய்ந்து அதற்குப் பரிகாரங்களை காண முன்வர வில்லை.

அன்று சர்வதேச சமூகம் ஒரு பக்கச் சார்பாக இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை அள்ளி வழங்காமல் விட்டிருந்தால், இன்று இலங்கைத்தீவின் சரித்திரம் வேறாக அமைந்திருக்கும்.

தமிழர் இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டதற்கு சர்வதேச சமூகத்திற்கும் பெரும் பங்கு உண்டு என்பது மறைக்க முடியாத ஓர் உண்மை. (கு)

# இன்று ஒரு தகவல்

## அரசரும் அமைச்சரும்

ஒரு நாட்டிற்கு ராஜாவாக இருப்பவர் மிகவும் பொறுமைசாலியாக, புத்திசாலியாக இருக்கவேண்டும். இல்லாது விட்டால் மிகவும் கஷ்டம். சரி. ராஜாவுக்குப் புத்தி போதாவிட்டால் புத்திசாலியான அமைச்சர்களை பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படியும் அப்படியும் இல்லை என்றால் கஷ்டம்தான்.

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார்.அவர் மிகவும் நல்லவர் தான். இருந்தாலும் ஒரு விஷயத்தில் அவருக்கு கொஞ்சம் சபலம் உண்டு. அதாவது விதம் விதமான உடைகள் அணிவதில் அவருக்கு ஆசை. எந்த ஊரில் இருந்தாலும் எவ்வளவு விலையாக இருந்தாலும் அதை வாங்கிக் கொண்டுவந்து போட்டுப் பார்த்துவிடுவார். ராஜாவின் இந்த வீக்னஸை இரண்டுபேர் நன்குபுரிந்து கொண்டார்கள். இவர்கள் ஒருநாள் அரண்மனைக்கு வந்து ராஜவைப் பார்த்தார்கள். "அரசே! மிக உயர்வான துணிகளை, நெசவு செய்வதில் நாங்கள் கெட்டிக்காரர்கள்" என்றனர். "அப்படியா? அப்படியென்றால் வாருங்கள் உட்காருங்கள்" என்றார் ராஜா.

ஆனால் கொஞ்சம் செலவு அதிகமாகும் என்றார்கள். "செலவைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்"என்றார் ராஜா.-உடனே அமைச்சரைக் கூப்பிட்டு "இவர்கள் எவ்வளவு கேட்டாலும் நமது அரச கஜானாவில் இருந்து எடுத்துக் கொடுங்கள்" என்று உத்தரவிட்டார். மந்திரிக்கு இது பிடிக்கவில்லை... இருந்தாலும் மன்னரின் உத்தரவை மீறமுடியுமா? சரியென்று தலையாட்டிவிட்டார். "அரசே அந்தத் துணியை நாங்கள் நெய்துமுடிக்க ஒரு வருடகாலம் ஆகும்" என்றார்.

பரவாயில்லை நீங்கள் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்." இங்கே நீங்கள் தங்கியிருந்து வேலைசெய்ய எல்லா வசதிகளையும் செய்து தருகிறேன்" என்றார். அரண்மனையில் ஒரு பெரிய அறையை ஒதுக்கிக் கொடுக்கும் படி உத்தரவிட்டார். மீண்டும் அந்த ஆசாமிகளும் மெதுவாகத் தலையைச் சொறிந்தார்கள். "அரசே! இன்னுமொரு முக்கியமான விடயம். நாங்கள் நெய்து கொடுக்கும் உடை அறிவாளிகளின் கண்ணுக்குத் தான் தெரியும். முட்டாள்களுக்குத் தெரியாது. அப்படி ஒரு விசேஷம் உண்டு அதில்" என்றார்கள்."ஆகா! பேஷ். ஆகவேண்டியதைப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் ராஜா.

அமைச்சர் அந்த இரண்டு ஆசாமிகளையும் அழைத்துக் கொண்டு போய்த் தங்கவைத்தார். அவர்கள் கேட்பதையெல்லாம் கொடுத்தார். கஜானாவில் பாதி காலி. இவர்களுக்கு ராஜோபசாரம். சுகமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியில் ஏதாவது ஆள் அரவம் கேட்டால் மட்டும் உடனே இரண்டு பேரும் சும்மா உட்கார்ந்து தறி நெய்வது மாதிரிக் கையைக் காலை ஆட்டிக்கொண்டு பாசாங்கு செய்துகொண்டிருப்பார்கள். பாக்கிறவர்களுக்கு சந்தேகம் வரும்.

"என்ன இது... இவர்கள் வெறும் தறியை நெய்துகொண்டிருக்கிறார்களே" என்று. இருந்தாலும் அதை வெளியில் சொல்வதற்குப் பயந்தார்கள். ஏனென்றால் "முட்டாள்களின் கண்ணுக்கு அந்த உடை தெரியாது" என்றும் சொன்னார்களே. நமக்குத் தெரியவில்லை என்று சொல்லி முட்டாள் ஆக வேணடுமா? என்று நினைத்துக் கொண்டே எல்லோரும் பேசாமல் இருந்தார்கள்.

இப்படி ஒருவருடம் ஓடிவிட்டது. ஒரு குறிப்பிட்ட நாளில் அந்த இரண்டுபேரும் அரசசபைக்கு வந்தனர். ராஜாவின் முன்னால் போய் நின்று வெறும் கையை நீட்டி அரசே இதோ இருக்கிறது பாருங்கள் உங்கள் உடை. பிரித்துக் காட்டுகிறோம் பாருங்கள். ஒரமெல்லாம் இரத்தினக் கல்லும் வைரமுமாக ஜொலிக்கிறது பாருங்கள்" என்று சொல்லி சும்மா கைகளை அசைத்துப் பாவனை செய்துகொண்டிருந்தார்கள்.

ராஜா உற்றுப் பார்த்தார். அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. இருந்தாலும் தெரியவில்லை என்று சொன்னால் நம்மை எல்லோரும் முட்டாள் என்று நினைத்துவிடுவார்களே என்ற பயம். அதனால் "ஆகா அற்புதம்... கலைஞர்களே உங்கள் கைவேலை அபாரம்" என்றார். ராஜாவே சொல்லிவிட்டார் அல்லவா. உடனே அந்த சபையில் இருந்தவர்களும் "ஆகா. நாங்களும் அதைத்தான் சொல்லவேண்டும் என்று நினைத்தோம். அதற்குள் அரசே சொல்லிவிட்டார். பிரமாதமான ஆடை. இதுபோல் உலகத்தில் வேறு எங்குமே கிடையாது" என்றார்கள்.

ராஜா அதன்பின் அமைச்சரைக் கூப்பிட்டார். இவர்களுக்குத் தகுந்த மரியாதை செய்து அனுப்புங்கள் என்றார். அமைச்சர் இந்த இடத்தில் தான் ஒரு யோசனை செய்தார்.மெதுவாக ராஜாவின் காதோடு காதாக என்னமோ சொன்னார் அவ்வளவுதான். ராஜா உடனே "இந்த இரண்டு பேரையும் கைகளில் விலங்குமாட்டி ஜெயிலில் போடுங்கள்"என்றார்.அதுபோலவே செய்துவிட்டார்கள். அது இருக்கட்டும்...அந்த அமைச்சர் ராஜாவின் காதில் சொன்ன விடயம் என்ன தெரியுமா? இதுதான் "அரசே! இவர் தயாரித்திருக்கும் உடை மிகவும் பிரமாதம் தான். இருந்தாலும் இவர்கள் இதை விட உயர்ந்த ஆடையை வேறு யாருக்கும் செய்துகொடுக்கக் கூடாது அல்லவா? அடுத்து இவர்கள் தயார் செய்யும் உடை இதைவிட அழகாக இருக்கும். அதை இன்னுமொரு ராஜா வாங்கிவிட்டார் என்றால் நமது கௌரவம் என்னாவது? அதனால் இவர்களின் கையைக் கட்டிப போட்டு விடுவது தான் நல்லது. வெளியே இவர்களை விடக்கூடாது" இதுதான் அமைச்சர் ராஜாவுக்குச் சொன்ன ஆலோசனை.

புரிந்துகொள்ள முடியாத ராஜாவுக்கு இப்படித்தான் புத்தி சொல்ல வேண்டியிருக்கிறது. அமைச்சர் இந்த யோசனையைச் சொன்னதும் அந்த ராஜா என்ன சொன்னார் தெரியுமா? "இதற்குத்தான்... உங்களை மாதிரி விபரம் தெரிந்தவர்களை பக்கத்தில் வைத்திருக்க வேண்டும் என்று சொல்வது" என்றார் மிகவும் பெருமையாக.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மஹிந்த சிந்தனை அடிப்படையிலேயே பேச்சு; ஜே.வி.பிக்கு ஜனாதிபதி வாக்குறுதி!



ஜெனீவாப் பேச்சுக்கள் மஹிந்த சிந்தனையின் அடிப்படையில்தான் நடைபெறும் என்று ஜே.வி. பிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்துள்ளார்.

அலரி மாளிகையில் கடந்த புதன்கிழமை ஜே.வி.பி. குழு ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய போது,

அரசாங்கக் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி ஹெச் எக்.டி.சில்வா, கோமின் தயாசிறி மற்றும் பாலித கோகென்ன ஆகியோர் இடம்பெற்றுள்ளதால் நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் அளித்தே அவர்கள் பேச்சுக் களை நடத்துவர் என்று மஹிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் தனித்துப் போட்டியிட்டாலும் இரு கட்சிகளுக்கும் இடையே மோதல் ஏற்படாதவாறு செயற்படுவது குறித்தும் மஹிந்தவும் ஜே.வி.பி. குழுவினரும் ஆலோசனை நடத்தியுள்ளனர். (கு)

### வடமராட்சியில்

# விவசாய காணி இடாப்பு — தயாரிக்கும் வேலை ஆரம்பம்

(மருதங்கேணி)

வடமராட்சிப் பிதேசத்திலுள்ள விவசாயக் காணி இடாப்பு தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமராட்சி பெரும்பாக உத்தியோகத்தர் சதாசிவம் உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 15 வருடங்களுக்கு மேலாக காணி இடாப்பு மீளாய்வு செய்யப்படாததால் மானிய அடிப்படையில் உரம் வழங்குவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண் டியுள்ளது.'

காணி இடாப்பை அவ்வப் பகுதிகளிலுள்ள கமக் கார அமைப்புக்கள் தயாரிக்கவுள்ளன. விவசாய நிலங்கள் மற்றும் நெற்காணி உள்ளடங்கலாக இவ் இடாப்பு தயாரிக்கப்படவுள்ளது.

இடாப்பு தயாரிக்கும்போது காணிச் சொந்தக்காரரின் முழுப்பெயர், விலாசம், உறுதி இலக்கம், எழுதிய நொத்தாரிசுவின் பெயர் , காணியின் நிலப்பரப்பு என்பன உள்ளடங்கலாக கமக்கார அமைப்பும் அப்பகுதி கிராம சேவக அலுவலகமும் இணைந்து இவ் இடாப்பைத் தயாரிக்க வேண்டும்.

இவ் இடாப்பு மக்கள் பார்வைக்காக ஒரு மாதம் அளவில் வைக்கப்படும் எனவும் பின்னர் அதில் திருத்தங்கள், எதிர்ப்புக்கள் கிடைக்கப்பெற்றால் அவை திருத்தம் செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

இவ் இடாப்பை வைத்துக் கொண்டே எதிர்காலத்தில் மானிய விலையில் உரம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக மேலும் விபரங்களை அறிய விரும்பினால் வடமராட்சி விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் சதாசிவம் உருத்திரேஸ்வரனை மந்திகையில் அமைந்துள்ள புலோலி கமநல சேவை நிலையத்தில் சந்தித்து விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (கு-35)

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையுடன் இணைந்து நடாத்தும் பாடசாலை சார் சுகாதாரமும் சமூக உளவியல் திட்டத்தினதும் ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 20 ஆம் திகதி நாவற்குழி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கப் பிரமுகர் செல்வி. சுவர்ணா அழகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் பிரதம விருந்தினராகப் பங்குகொள்கிறார்.

அத்துடன் தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி த.கோகுலதாசன், சாவகச்சேரி செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன், திட்ட உதவியாளர் திருமதி எஸ்.சித்திரா ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்குகொள்கின்றனர். (கு-16)

## தூறல் நீர்ப்பாசனக் கருவிகள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிக்ளுக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் தூறல் நீர்பாசனக் கருவிகளை வழங்கவுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் 60 விவசாயிகளுக்கு நிறுவனம் தூறல் நீர்ப்பாசன கருவிகளை வழங்கவுள்ளது.

இதற்காக பயனாளிகளைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையில் மருதங்கேணி விவசாயப் போதனாசிரியர் என். சிவகுமார் ஈடுபட்டுள்ளார். (து-35)

## தோட்டங்கள் அபிவிருத்தி

(மருதங்கேணி)

உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் தோட்டங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் முயற்சிகளில் வேள்ட் விசன் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இவற்றை அபிவிருத்தி செய்வதற்கு பலவித உதவிகளை இந்நிறுவனம் செய்யவுள்ளது . இவற்றிற்கான விதைகளை இலவசமாக வழங்கி செய்கை முறைகளைப் பற்றியும் அறிவுறுத்தவுள்ளது. (கு-35)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச் சங்க 15ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எழுத்து மூலம் முன் கூட்டியே அறியத் தரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-29)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் பவள விழா ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் வ. ஆறு முகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ் பிரதம அஞ்சல் அதிபருமாகிய க. ஞானலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ச)

## வேள்ட் விசன் உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேள்ட் விசன் நிறுவனம் 2500 சைக்கிள்களை வழங்கவுள்ளது.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகம் இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் ஏற்கனவே பல உதவிகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்து வந்ததுடன் மேலும் பல உதவிகளை செய்யவுள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (கு-35)

## தென்மராட்சி பாடசாலைகளில் தளபாடங்கள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்தில் இயங்கி வருகின்ற 58க்கு மேற்பட்ட பாடசாலைகளிலும் தளபாடத்துக்கான தட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நிலவி வருவதாகத் தெரிய வருகிறது.

இதன்காரணமாக பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை அன்றாடம் அனுபவித்து வருகின்றனர்.

தளபாடப் பற்றாக்குறையை நீக்கித் தரும்படி அதிபர்கள்-ஆசிரியர்கள் தென்மராட்சிக் கல்வி வலயத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதேசமயம் தளபாடப் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு விரைவில் தளபாடங்களைப் பெற்றுக் கொடுக்க வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் முயற்சி எடுத்து வருவதாக வலய வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. (கு-16)

## ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளரான முகமட் மகுரூப்பை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் நேற்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டார்கள்.

இந்த ஆர்ப்பாட்டம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் நடைபெற்றது.

மகுரூப்பின் செயற்பாடுகள் காரணமாக 52 வருடங்கள் தக்கவைத்திருந்த கொழும்பு மாநகர சபையை இழக்க நேர்ந்ததாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (கு-9)

# பூகம்பம் ஏற்படுவதை முன்கூட்டியே அறிய முடியுமா?

விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தற்பொழுது ரேடியோ அலை மூலம் வினோதமான மற்றும் புதுவிதமான ஒலி மற்றும் ஒளியை வானில் ஏற்படுத்துவதன் மூலம் புதிய யுத்தியை கண்டறிந்துள்ளார்கள். இதன் மூலம் ஒரு மணிநேரம், ஒரு நாள் மற்றும் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே பூகம்பம் ஏற்படுவதை அறிவிக்க முடியும். ஆனால் சமீபத்தில்தான் நிபுணர்கள் இந்த புதிய தொழில்நுட்பத்தின் மூலம் முறையாக இந்தப் பேரழிவு முன்னறிவிப்பான்களை பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள்.

சில நேரங்களில் வானில் ஏற்படும் ஒளி பயங்கரமான பெரிய பூகம்பங்களைக் கூட முன்னறிவிப்பு செய்யும். உதாரணமாக 17 ஜனவரி, 1995 இல் கூட ஜப்பானில் உள்ள கோபே நகரத்தில் 8 கிலோமீற்றர் சுற்றளவில் பூமியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் வெள்ளை, நீலம் மற்றும் ஆரஞ்சு நிற ஒளி உமிழப்பட்டது. அதன்பின் ஒரு மணிநேரம் சென்றபின் 6.9 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டு 5500 பேருக்கும் மேல் மாண்டனர். பூகம்ப ஆராய்ச்சியாளர்கள் இம்மாதிரியான பதிவுகளை 1960 இலிருந்து ஜப்பானிலும், கனடாவில் 1988 இலிருந்தும் பதிய தொடங்கியுள்ளனர்.

மற்றொரு முறையில் இவ்வாறுநேரிடக்கூடிய பூகம்பம் ரேடியோ அதிர்வலையில் (Ultralow Frequency Radio band) ஏற்படக்கூடிய குழப்பங்கள் மூலம் ஒருவாரத்திற்கு முன் சில நேரங்களில் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகக் கூட எச்சரிக்கப்படுகிறது. கலிபோர்னியாவிலுள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்திலுள்ள ஆராய்ச்சியாளர்கள் சான்பிரான் சிஸ்கோ வளைகுடாப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தை அது ஏற்படும் முன்பே இம்மாதிரியான சமிக்ஞைகள் மூலம் பதிந்துள்ளனர். டுங்குவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 63 பேர் இறந்தனர்.

பூகம்பம் ஏற்படுவதற்குமுன் பூமியில் உள்ள பாறைகளோ அல்லது தட்டுகளோ நகரும்போதோ அல்லது சிதையும்போதோ ஏற்படும் மின்காந்தத்தில் ஏற்படும் குழப்பத்தினால் ஒளி மற்றும்



1. ஜனவரி 21, 2001 இல் 5 நாட்களுக்கு முன் எடுக்கப்பட்டது.
2. பூகம்பம் மையம் கொண்ட இடம்.
3.பூகம்பம் ஏற்பட்டு 2 நாட்களுக்குப் பின் எடுக்கபட்ட படம்.

ரேடியோ அலை சமிக்ஞைகள் மூலம் எச்சரிக்கப்படுகிறது. நாசா ஆராய்ச்சி மையத்தில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர் ஒருவர் ஆராய்ச்சி மையத்தில் பாறை சிதைவுப்படுத்தும் பரிசோதனையை விளக்கினார். இச் சோதனையில் சிதைக்கப்பட்ட அல்லது நொறுக்கப்பட்ட பாறையில் உள்ள தாதுப் பொருட்களின் ஒட்சி சன் பிணைப்புக்கள் சிதைவதால் பாறையில் இடைவெளிகள், துளைகள் ஏற்படுகிறது. இதனால் பாறையிலிருந்து எலக்ட்ரான் அணுக்கள் ஏராளமாக வெளியேற்றப்படுகிறது.

இவ்வாறு வெளியேறும் எல்க்ட்ரான் அணுக்கள் பூமியின் வெப்பம் நிறைந்த அடுக்குகளை தாக்குகிறது. இதனால் அளவுக்கதிகமான மின்சாரம் வெளியாகிறது. ஆராய்ச்சி மையத்தில் நிகழ்த்தப்பட்ட இச்சோதனையில் நகரும் வேகம் ஒரு வினாடிக்கு 300 மீற்றர் இருந்தது.

மற்றொரு ஆராய்ச்சியில் நொறுங்கிய பாறைகளின் இடைவெளியில் ஏராளமான திரவ அணுக்கள் செல்வதால் பாறையில் ஸ்திரத்தன்மையை பாதிக்கிறது. மேலும் அதிகமான மின்சாரமும் ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் மின்சாரம் புவிப்பரப்பில் உள்ள ரேடியோ அலையில் மற்றும் மின்காந்தத்தில் குழப்பம் ஏற்படுகிறது.

சாட்டிலைட் செயற்கைக் கோள்களின் உதவியுடன் நிபுணர்கள் மிகவும் குறைந்த அதிர்வலையை (Extremely Low Frequency & ELF) கண்காணிக்க முடியும். மேலும் புவியின் புறப்பரப்பில் துளைகளோ அல்லது வெடிப்புகளோ ஏற்படுவதால் எல்க்ட்ரான் அணுக்கள்



பூகம்பம் ஏற்படுவதற்கு முன் அறிகுறியாக காற்றிலுள்ள மின்னணுக்களின் மாற்றங்களால் இவ்வாறான ஒளி வானில் முன்கூட்டியே தென்படும். இது 1966இல் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் ஏற்படுவதற்கு முன் பெறப்பட்ட எச்சரிக்கை. ஜப்பானில் கோபே (Kobe) நகரத்தில் 1995 ஜனவரி 17இல் நடந்த பூகம்பத்தின் ஹன்ஷின் எக்ஸ்பிரஸ்வே (Hanshin Exprossway) சேதமடைந்தது.



ஈரானில் ஏற்பட்ட பூகம்பத்தால் டுபாயில்கூட மிக இலேசான அதிர்வு உணரப்பட்டதன் விளைவாக உயரமான கட்டடங்களில் உள்ளவர்கள் பீதியுடன் வெளியேறிய காட்சி.

சேருவதால் அகச்சிவப்பு ஒளிக்கற்றைகள் (Infrared light) மூலம் அங்கு பூகம்பத்திற்கான அறிகுறியை கண்காணிக்க முடிகிறது.

உலகில் பல விஞ்ஞானிகள் மேற்கண்ட முறைகளைத்தான் புவியின் மாற்றங்களை மற்றும் பூகம்ப முன்னறிவிப்புகளை துல்லியமாக அறிய பின்பற்றி வருகின்றனர். 2000ம் ஆண்டில் கலிபோர்னியாவிலுள்ள பலோ ஆல்டோ (Palo Alto) என்ற புவி ஆராய்ச்சி நிலையத்தில் டாம் பிளையர் என்பவரின் தலைமையில் ஒரு குழுவினால் புவியின் காந்தப்புலத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிய வலையமைப்பு மூலம் நிலத்திலிருந்தே கண்காணிப்பதற்கு (Network of Ground & based stations) ஒரு நிலையம் நிறுவப்பட்டது.

இதுவரை இதன் மூலம் 60 பூகம்ப அறிகுறிகள் கண்காணிக்கப்பட்டு பதியப்பட்டுள்ளன. பின் 2003ல் இதனுடன் ஸ்டான்போர்டு மற்றும் லாக்ஹீட் மார்ட்டின் கார்ப்பரேஷன் என்ற மற்றொரு ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து தொலைவில் கண்காணிக்கக்கூடிய ஒரு சாட்டிலைட் செயற்கை கோளை அனுப்ப கட்டுமானப் பணிகளை தொடங்கியுள்ளது. இது மிகவும் பெரிய, துல்லியமாக பூமியில் ஏற்படுகிற மாற்றங்களை உணரக்கூடிய செயற்கை கோளாக இருக்கும். இன்னும் பத்தாண்டுகளில் இதனை செயல்படுத்த ஆரம்பிக்கலாம்..

1989 இல் சான் பிரான்சிஸ்கோவுக்கு அருகில் லோமா ப்ரீட்டா என்ற இடத்தில் அங்கு 7.1 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டது. அதற்கு முன்பே அங்கு பலமான காந்தப்புல குழப்பம் பூகம்ப கண்காணிப்பு நிலையத்தின் மூலம் முன்னறிவிப்பு செய்யப்பட்டது. 1999 செப்டம்பர் 21 இல் தைவானிலுள்ள சிச்சி நகரில் 7.7 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்படுவதற்கு முன் இம்முறையின் மூலம் முன்னெச்சரிக்கை செய்யப்பட்டது. தைவானில் மட்டும் ஆராய்ச்சியாளர்கள் 1997லிருந்து 1999 வரை 144 பூகம்ப அறிகுறிகளை பதிந்துள்ளனர்.

1989இல் ஆர்மீனியாவில் ஏற்பட்ட மிகப்பெரிய பூகம்பத்திகுப்பின் சோவியத்தின் காஸ்மாஸ் சாட்டி லைட் செயற்கைக்கோள் அங்கு ஒருமாதம் வரை பூமியிலிருந்து அதிர்வுகளை பதிவு செய்தது. ஆனால் மிகப்பெரிய பூகம்பம் ஏற்படுவதற்கு முன் இம்மாதிரியான செயற்கைக்கோள் உதவியுடன் முன்னறிவிப்பு பெறப்படாதது துரதிருஷ்டம்தான். 2003 இல் கலிபோர்னியாவிலுள்ள சான்சமீயன் என்ற இடத்தில் 6.5 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பத்தை அமெரிக்காவின் க்வாக்சாட் (QuakeSat) என்ற விண்கலம் இரண்டு மாதங்களுக்கு முன்பே முன்னெச்சரிக்கை செய்தது.

ஜூன் 2004 இல் பிரெஞ்சு அரசு இதற்குமுன் அனுப்பப்பட்ட விண்கலத்தைவிட அதிநவீன தொழில்நுட்பத்

எம்.ஜே.எம்.இக்பால்

துடன் மற்றவைகளைவிட துல்லியமாக கண்காணிக்கக்கூடிய டிமீட்டர் (DEMETER - Detection of Electro& Magnetic Emissions Transmitted from Earthquake Regions) என்ற விண்கலத்தை அனுப்பி புவியில் ஏற்படும் அதிர்வு தகவல்களை பெற்றது.

இது பூகம்பம் ஏற்படுவதற்கு முன் பூமியில் பாறைகளில் வழக்கத்திற்கு மாறாக அளவுக்கதிகமான எல்க்ட்ரான் அணுக்கள் உற்பத்தியாவதை கண்காணிப்பதன் மூலம் சமிக்ஞைகளை பெற்றது. ஆனால் சமீபத்தில் அக்டோபரில் காஷ்மீரில் பூகம்பம் ஏற்படுவதற்கு முன் தான் துரதிஷ்டவசமாக இந்த விண்கலம் தொழில்நுட்ப கோளாறுகளால் செயலிழந்தது.

இதனால் காஷ்மீர் மற்றும் பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தை முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை பெற இயலாமல் போய்விட்டது.

## தமிழர்கள் மீதான இராணுவத்தின்
## மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன - புலித்தேவன்

(கொழும்பு)

தமிழர்கள் மீதான இராணுவத்தினரின் மனித உரிமை மீறல்கள் நாளாந்தம் தொடருகின்றன என்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த நேர்காணலில்,

ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பில் முன்கூட்டியே எதுவும் சொல்வதற்கில்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் செயற்படுத்த அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறதோ அதைப் பொறுத்தே அனைத்தும் தீர்மானிக்கப்படும்.

தமிழர்கள் மீதான இராணுவத்தின் மனித உரிமை மீறல்கள் நாளாந்தம் தொடர்கின்றன.

கடந்த ஜனவரி முதல் 120 தமிழர்களை இராணுவம் படுகொலை செய்துள்ளது. 55 பேரை இதுவரை காணவில்லை என்றார். (த)

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 87

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



தனது நடன அசைவுகளால் இரசிகர்களின் மனதில் இடம்பிடித்த கதாநாயகர்களில் ஒருவரான இவர் தற்போது டைரக்ஷன் துறையிலும் இறங்கியிருக்கிறார். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 87**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-87

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..........................

அனுப்புபவரின் முகவரி :-..........................

..........................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 85

சரியான விடை





ராஜ்கிரண்

**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 85இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | செ.பாலமுரளி<br>கைதடி தெற்கு,<br>கைதடி. |
| இரண்டாம் பரிசு | :- | வி.சந்தியா<br>ஓடக்கரை,<br>பருத்தித்துறை. |
| மூன்றாம் பரிசு | :- | க.கபிலன்<br>நீர்வேலி வடக்கு,<br>நீர்வேலி. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் வெறுவோர் பெயர் விபரம்:**

க.அனுஷன், யாழ்ப்பாணம். அ.சறோஜினி, நெல்லியடி. ஜெ.பார்த்தீபன், ஆனைக்கோட்டை. சி.கிருஷ்ணன், நல்லூர். ப.பவானி, நல்லூர். திருமதி பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். சி.காயத்திரி, கொக்குவில். பா.ராகுலன், யாழ்ப்பாணம். பா.பார்த்தீபன், மயிலங்காடு. இ.அமிர்தவர்சினி, இணுவில். யேசுஜீவன், யாழ்ப்பாணம். சி.பிரதீபா, குப்பிளான்தெற்கு. ர.துன்சியா, மயிலங்காடு. வே.குமாரசுவாமி, கரவெட்டி. நா.ஜொஜீபன், மானிப்பாய். ம.மைதிலி, கோண்டாவில்.

# பறக்கும் குட்டி ரோபோட்

வெட்ட வெளியில் தனாக பறக்கும் ரோபோட் விமானத்தைப் பற்றியெல்லாம் பார்த்திருக்கிறோம். ஆனால் தற்போது ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கிய ரோபோட் சற்றுவித்தியாசமானது. இந்த ரோபோட் மிகவும் சிறியதுதான். இதன் எடை வெறும் 30 கிராம் மட்டுமே. ஆனால் பறக்கும் சக்தி கொண்டது.

இதன் எடை மிகவும் குறைவு என்பதால் இதனை குட்டி ரோபோட் விமானம் என்று அழை



க்கலாம். இதன் நீளத் தைக் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். 80 சென்ரி மீற்றர்தான் இந்தக் குட்டி ரோபோட்டின் நீளம். இதனை சுவிஸ் பெடரல் இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த ஜீன் கிரிஸ்டோப் மற்றும் டேரியோ ப்ளோரீனோ என்ற ஆராய்ச்சியாளர்கள் இணைந்து தயாரித்துள்ளனர்.

இந்த குட்டி ரோபோட் விமானம் மிகவும் சிக்கலான இடங்களில் அதாவது குகை, சுரங்க வழிப்பாதை போன்றவைகளில் எந்த இடத்திலும் மோதாமல் பறக்கும் தன்மை கொண்டது. இதுபோன்ற இடங்களில் மீட்புப்பணி மற்றும் தேடும் பணிக்கு மிகவும் உதவிகரமாக இந்த மிகச்சிறிய பறக்கும் ரோபோட் இருக்கும். இதன் சிறப்பம்சமே எந்த இடத்திலும் மோதாமல் தானாகவே சரி செய்து கொள்ளும் ஆற்றல்தான்.

இத்னை ஆராய்ச்சியாளர்கள் கார்பன் இழைகள், மிக லேசான பிளைவுட் மற்றும் தடிமன் குறைந்த பிளாஸ்டிக் பிலிம்களால் தயாரித்துள்ளனர். இதனுடைய வால் மற்றும் இறக்கைகள் பிளாஸ்டிக் பிலிம்களால் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இறக்கைகளின் முனைகளிலும் முறையே இரண்டு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை மிகுந்த தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப் பட்டுள்ளது.

ஏனெனில் 30 கிராம் எடையுள்ள பறக்கும் ரோபோட்டின் இறக்கையில் கமரா என்றால் அது எவ்வளவு நுட்பத்துடன் த்யாரிக்கப்பட்டிருக்கும் என்பதை பார்த்துக்கொள்ளுங்கள்.

விமானத்தின் முன்புறமும் ஒரு கமரா பொருத்தப்பட்டுள்ளது. இக்கமரா ஒரு வினாடியில் 20 பங்கு நேரத்தில் எதிரே தட்டுப்படும் சுவரையோ மற்றும் பொருளையோ படம் எடுத்து உடனடியாகக் கணக்கிட்டு மோதலை தவிர்க்கக்கூடியது. இதன் அடுத்த கட்டமாக ஆராய்ச்சியாளர்கள் இதைவிட மிகச் சிறிய அதாவது அதிகபட்சம் 12 கிராம் எடை மற்றும் 40 சென்ரி மீற்றர் நீளமுள்ள பறக்கும் மிகச்சிறிய ரோபோட்டை தயாரிக்கும் பணியில் உள்ளனர்.


# ஐஸ் ஹோட்டல்

ஒரே மாதிரியான இடம் பலருக்கும் சலித்து விடக்கூடும். இது ஒரு விதத்தில் ஒரே மாதிரியான சாப்பாடு சாப்பிடுபவர்கள் அதற்கு மாறாக ஹோட்டலைத் தேடிச் செல்வது போல் ஒரு ஹோட்டல் சம்பந்தமான விஷயம்தான் இது.



ருமேனியாவில் பலியா லேக் என்ற இடத்தில் ஐஸ் பாறைகள் சூழ்ந்த ஒரு இடத்தில் அந்தப் பனிப்பாறையைக் குடைந்து அதை மிக நேர்த்தியாகத் அதேநேரத்தில் மிக நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் செதுக்கி அதை ஒரு ஹோட்டலாக உருவாக்கி உள்ளனர். வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டு வேகாத வெயிலில் வேலை பார்த்து அலுத்துக்கொள்பவர்களுக்கு இந்த ஜில் குளிர் ஹோட்டலை ஒரு வரப்பிரசாதமாக கருதுகின்றனர். இந்த ஹோட்டலில் ஒரு அறையில் மட்டும் ஒருநாள் முழுவதும் தங்கியிருக்க ரூ.2200 வாடகை வசூலிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் ஜனவரி 31ஆம் திகதி திறக்கப்பட்ட இந்த ஹோட்டலுக்கு கேபிள் கார் மூலம் செல்லும் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஹோட்டலுக்குச் செல்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறதாம்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 91




*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 91**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ..........................

முகவரி :- ..........................

..........................

..........................

இங்கே வெட்டுக ------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)சுறுசுறுப்புக்கு ஊரும் இதனை ஒப்பிடுவர். (4)சுகாதாரத்துக்காக வீடுகளில் இதனை அமைப்பர். (5)சிறு குழந்தை - இப்படியுமழைப்பர். (9)உடைமை. (10)மிருதுவான இதனை காதில் பிடித்தே தூக்குவர். (11)காதணி வகைகளிலொன்று (குழம்பியுள்ளது).

## மேலிருந்து கீழ்

(1)ஏமாற்றுபவனை இப்படியுமழைப்பர். (2)கடுங்காற்று. (3)உறக்கத்தில் இது விழித்துக்கொள்ளும் (நினைவுகளின் பிரதிபலிப்பு). (6)கெடுஞ்சொல். (7)துக்கம்- இதனைக் குறிக்கும் (குழம்பியுள்ளது). (8)வன்மை - ஒத்தசொல். (10)தடவை.

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 89 இன் விடைகள்**

## இடமிருந்து வலம்

1.உலோசனம் 4.தடை 5.சாகரம் 7.மாம்பழம் 9.அமிலம் 10.பழி.

## மேலிருந்து கீழ்

1.உச்சாணி 2.சமரசம் 3.பாதகம் 6.ஆழம் 7.மாலுமி 8.குழி.

## பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | தி.மதுரா<br>கொக்குவில் மேற்கு,<br>கொக்குவில். |
| இரண்டாம் பரிசு | :- | வி.திவாகரன்<br>கட்டுடை,<br>மானிப்பாய். |
| மூன்றாம் பரிசு | :- | ஏ.கபீர்த்தன்<br>இல.620, நாவலர் வீதி,<br>அரியாலை. |

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப் பெறுவோரின் பெயர் விபரம்:**

ஞா.இராஜோதயன், கோப்பாய். க.குருநாதன், கோண்டாவில். வே.குமாரசுவாமி, கரவெட்டி. திருமதி செ.பாக்கியநாதன், வட்டுக்கோட்டை. வி.தனுஷன், மானிப்பாய். கே.இரத்தினசிங்கம், சுன்னாகம். வே.சியாமளா, பருத்தித்துறை. வ.விதுஷன், யாழ்ப்பாணம். சி.மதிவதனி, சண்டிலிப்பாய்.

## தெரிந்து கொள்ளுங்கள்...

*ஒரு மனிதன் தனது ஆயுட்காலம் முழுவதும் துப்பும் எச்சில் இரண்டு பெரிய நீச்சல் குளங்களை நிரப்பும் அளவிற்கு இருக்குமாம்.

*உடல் எலும்புகளில் நான்கில் ஒரு பங்கு கால்களில் உள்ளது.

*மனித உடலில் ஒரு நிமிடத்திற்கு 30 கோடி செல்கள் இறந்து போகின்றன.

# நேற்று ஆரம்பமான யாழ்ப்பாண பொதுநூலக








# கண்காட்சி நிகழ்வுகளிலிருந்து...










படங்கள்: எஸ்.ரி.ராஜா, திலீவின்பன்

# மூட்டு வலிக்கு

மனித உடலில் மிக முக்கிய பங்கு வகிப்பது எலும்புகள். அவை நன்றாக உள்ள போதுதான் ஓட முடிகிறது. விளையாட முடிகிறது. நடக்க முடிகிறது. மற்றும் வேலைகளைச் செய்ய, நாட்டியமாட முடிகிறது.

நாற்பது வயதைத் தாண்டியவுடன் நம்மில் பலரும் அல்லல்படுவது மூட்டுவலியிலும், முதுகு வலியிலும்தான். பக்கத்துத் தெருவுக்கு நடந்து செல்லக்கூட முடியாமல் வாகனங்களில் செல்கிறார்கள் பலர். எதனால் என்றால் மூட்டு வலியால்தான். வாத வலியும், வயிற்றுவலியும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்பார்க ள்.

### காரணங்கள்

காயங்கள், நோய்த் தொற்றுக்கள், வெள்ளை அணுக்கள், அதன் வகையை சேர்ந்த வெண்புரதச் செல்களை அந்நியப் பொருளாக நினைத்து அழித்து விடுதல், சைட்டோகீன் என்ற புரதம் அதிகமாகச் சுரப்பதால் அழற்சி போன்றவை ஏற்படுதல். இவைதவிர, பிறவி எலும்புத் தேய்மானம், சவ்வு பாதிப்பு, மூட்டில் சுரக்கும் நீரின் மாறுபாடுகள், உடற்பருமன் போன்றவற்றால் வருகின்றன.

### எலும்புத் தேய்மானம்

வயதானவர்களுக்கு வலி வருவது எலும்பு தேய்மானத்தினால் என்பது மிக முக்கியமானதாகும். எலும்பு நுனியிலுள்ள குருத்தெலும்புகள் மென்மையானதாகும். இவை நாளடைவில் அதிக தேய்மானம் அடைகிறது. ஏனெனில் அதிகப்படியான எடை உள்ளவர்களின் எடையினாலும், அதிகமாக மூட்டுகள் வேலை செய்வதாலும் இவை ஏற்படுகின்றன.


எனவே உடல் எடை என்பது வயதிற்கும், உடல் உயரத்திற்கும் ஏற்ப சீராக இருத்தல் வேண்டும். இப்படி மூட்டுத்தேய்மானம் உள்ளவர்களுக்கு பாதிக்கப்பட்ட மூட்டுகளில் வலியும், சடக் சடக் என சத்தமும் வரும்.

### மூட்டில் சுரக்கும் நீர் குறைதல்

மூட்டில் சினோவியல் ப்ளூட் எனப்படும் ஒருவித நீர் சுரக்கும். இந்த நீரானது மூட்டுக்களை தேய்மானம் ஏற்படாமல் வழவழப்புக் கொடுத்து காக்கிறது. இவைகளின் அளவு குறைவதும் ஒரு காரணம். மேலும் மூட்டுக்களில் சுரக்கும் நீரில் உப்புத்தன்மை அதிகரித்தால் கூட அவை மூட்டுக்களில் தங்கி வீக்கத்தையும் வேதனையையும் ஏற்படுத்தும். இவை சிறிய மூட்டுக்களைப் பாதிக் கும். கால் கட்டை விரல், கைவிரல்களையும் பொதுவாகத் தாக்கும். இதனால் மூட்டுக்களை நீட்டி மடக்க சிரமம் ஏற்படும். சரியான சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் கை விரல்களின் அசைவும் நின்று விடும்.

### சவ்வு பாதிப்பு

பெரும்பாலான மூட்டு வலிகள் சவ்வின் அழற்சியினால் ஏற்படும். இந்த சவ்வில் பாதிப்பு உள்ளபோது சலுக் சலுக் என சத்தம் கேட்கும். வலியும் வீக்கமும் ஏற்படும்.



### இடுப்புவலி

சிலருக்கு இடுப்பில் வலி ஏற்படும். உயிர் போகும் அளவிற்கு வலி உள்ளது என சொல்பவர்களையும் நாம் பார்க்கலாம். இவை இடுப்பு நரம்பினை எலும்பு அழுத்துவதால் ஏற்படுகிறது. ஒரு சிலருக்கு இடுப்பு குருத்தெலும்பு நகர்ந்து விடுவதாலும் இப்படி ஏற்படும். இதனை டிஸ்க்ப்ரொலாப்ஸ் என்பார்கள். பெண்களுக்கு கருப்பைக் கோளாறுகள் இருந்தாலும் இப்படி இடுப்பு வலி ஏற்படும் வாய்ப்பு உண்டு.

## முற்றுப்புள்ளி

### கழுத்துவலி

இது கழுத்திலுள்ள எலும்பின் தேய்மானத்தினால், எலும்புகள் நரம்பினை அழுத்துவதால் ஏற்படுகிறது. பொதுவாக கழுத்தைத் திருப்புவதில் கீழே மேலே திருப்புவதில் சிரமம் இருக்கும். லேசான மயக்கம் ஒரு சிலருக்கு ஏற்படும். வலியானது கழுத்திலிருந்து கைகளுக்கு பரவும். இதற்குப் பயிற்சிகள் தனியாக உள்ளன. இவற்றைக் கடைப்பிடித்தால் கழுத்து வலியிலிருந்து குணமடையலாம்.

### மூட்டுவலி உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

*சத்துள்ள கீரை, காய்கறி சாப்பிட வேண் டும்.

*குளிர்ந்த நீரில் குளிப்பதை விடுத்து இளம் சூடான நீரில் குளிக்கவும்.

*புளிப்புள்ள உணவுகளைக் குறைத்தல் வேண்டும்.

*பொதுவாக ஈரமான இடங்களில், நீரில் நீண்டநேரம் இருக்கக்கூடாது.

*வலி உள்ள போது வலி குறையத் தைலம் தேய்த்துக்கொள்ளவேண்டும்.

**திவாகரன்**

ஹோமியோ முறைப்படி இதற்கு பிரத்தியேக மருந்துகள் நிறைய உள்ளன.

மற்ற முறைகளைப் போல மூட்டு வலிக்கு மருத் துவம், மருந்து என்பதை விட இந்த நோய் ஏன் ஏற்பட்டது? காரணம் என்ன? எப்போது இந்த நோய் ஏற்பட்டது? வலி இருக்கு மானால் எப்போது அதிகரிக்கிறது. அல்லது குறைகிறது? நோயாளிக்கு எந்த உணவு சாப்பிடும்போது நோய் கூடுகிறது? பரம்பரையில் யாருக்கேனும் இந்தப் பாதிப்பு உண்டா? என்பதைக் கேட்டு ஹோமியோ மருந்துகள் கொடுக்கும்போது மூட்டுவலிக்கு முழு நிவாரணம் கிடைக்கிறது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சாரசபை (சுன்னாகம்) பொறியியலாளர் மு.அமுதலிங்கமும் சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரமும் கலந்து கொள்ள வுள்ளார்கள். (து)

## நிர்வாகம் தெரிவு

(இணுவில்)

உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாவனையாளர் அதிகாரசபைக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக தம்பித்துரையும், செயலாளராக சி.திருக்குமாரும், பொருளாளராக வே.ஜெனகனும், உபதலைவராக ஐ.இராமசாமியும், உப செயலாளராக ஜெயானந்தராசாவும், குழு உறுப்பினர்களாக சி.தருமலிங்கம், ஜெகநாதன், எம்.கதிர்காமநாதன், எஸ்.குமாரசாமி, ரீ.மதிவதனி, இ.கிருஷ்ணபிள்ளை, சிவானந்தன், சுத்தானந்தன், மகாதேவன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தெரிவு பிரதேச செயலர் திருவாகரன் தலைமையில் இடம்பெற்றது. (து-122)

## போட்டிகள்

(இணுவில்)

இணுவில் பொது நூலகம் தனது 4ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் முகமாக மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, கரம், நாடகம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், செஸ், வாசிப்பு என பலதரப்பட்ட போட்டிகளை நடத்தவுள்ளது.

மேலதிக விபரங்களைப் பெற நூலகத்திடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (து-122)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பொ.சண்முகநாதன் எழுதிய நினைக்க, சிரிக்க, சிந்திக்க என்ற நகைச்சுவைக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா நாளை காலை 9.30 மணிக்கு சுன்னா கம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் டொக்டர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ சி.சிவசரவணபவன் (சிற்பி) தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராசா வெளியீட்டுரையையும், பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு மதிப்புரையையும் நிகழத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)

## பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களிடையே கணனி மென்பொருள் உருவாக்கல் போட்டி

(கொழும்பு)

மாகாண மட்டத்தில் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் கணனிக் கல்வியியல் மென்பொருள் உருவாக்கல் போட்டியினை நடத்துவதற்கு கல்வியமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

கணனிக் கல்வியியல் போட்டியில் அனைத்து ஆசிரியர்களும், 6ஆம் தரத்துக்கு மேல் கல்வி கற்கும் மாணவர்களும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஆக்கங்களையும் ஆசிரியர்களால் ஆக்கப்படும் மென்பொருளையும் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் மாகாண மட்டத்திலான இடை நிலைக் கல்வி நவீனமயப்படுத்தும் செயல் திட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மாகாண மட்ட்த்தில் முதலாம் இடம் பெறும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனித்தனியாக முதலாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் 2ஆம் பரிசாக 5ஆயிரம் ரூபாவும் 3ஆம் பரிசாக 3ஆயிரம் ரூபாவும் 4 இடத்திலிருந்து 10 இடம் வரை தெரிவு செய் யப்படுபவர்களுக்கு தலா 2ஆயிரம் ரூபா வும் 11ஆம் இடத்திலிருந்து 20 ஆம் இடம் வரை பெறுபவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும் பணப்பரிசுழ் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டி மூலம் தெரிவு செய்யப்படும் மென்பொருள் கல்வி அமைச்சிற்கு உரியதாகக் கருதப்பட்டு தேசிய ரீதியில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

போட்டியாளர்களால் தயாரிக்கப்படும் மென்பொருள் 15 நிமிடநேரம் கொண்டதாகவும் அது இறுவட்டு மூலம் சமர்ப்பிக்கப் படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போட்டி தொடர்பான சுற்றறிக்கையினை கல்வி அமைச்சின் செயலாளர் ஆரியரத்தின ஹேலகே அனுப்பி வைத்துள்ளார். (து-9)

## மட்டக்களப்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டப் பேரணி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை விவசாயிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று நடைபெற்றது.

தாம் அறுவடை செய்த நெல்லை உரிய விலைக்கு விற்க முடியவில்லை என்று தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொக்கட்டிச் சோலையிலிருந்து ஆரம்பமான இந்தப் பேரணி பட்டிப்பளை வரை நடைபெற்றது.

ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் விவசாயிகள் பட்டிப்பளை விவசாய செயலாளர்களிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இதன் பிரதிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (து-9)

## யாழ். சுகாதார திணைக்கள அலுவலர்களுக்கு மொழிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அரச கரும மொழித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மும்மொழித் தேர்ச்சிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் யாழ்.சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்கான பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் யாழ்.மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார திணைக்கள நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிகளில் கலந்துகொண்டு பயிற்சி பெற விரும்பும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பெயர்ப்பட்டியலை தமது பணிமனைக்கு உடன் அனுப்பிவைக்குமாறு இச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## முல்லை மீனவர்களை காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவைச் சேர்ந்த இரண்டு மீனவர்களைக் காணவில்லை என யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேவசகாயம் ஸ்ரான்லி ஜெயகுமார் (வயது 39), அன்ரனிப்பிள்ளை சூசைநாதர் (வயது 42) ஆகிய இருவரும் கடந்த மாதம் 23ஆம் திகதி வண்ணாளர்குளம் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்றதாகவும் அன்றிலிருந்து அவர்களைக் காணவில்லை என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டது.

இது குறித்து கடற்படைத் தளபதியிடம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி றோகித பிரியதர்ஷன தொடர்புகொண்டு மீனவர்களின் கைது தொடர்பான தகவல் எதுவும் தெரிந்திருப்பின் உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுள்ளார். (ச-132,133)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

53 மீள்பார்வை


'திருவருட்செல்வர்' படத்தில் அப்பராக...

அதனால் தானே என் சுயசரிதை உருவாக நீங்கள் 'கேள்வி' கேட்கிறீர்கள். நான் 'பதில்' சொல்கிறேன். அதுபோல, நாகேஷ் கேள்வி கேட்க, நான் பதில் சொல்ல வேண்டும். இதில் டைமிங் மிக முக்கியம். நாங்கள் இருவருமே நடந்துகொண்டே பேசவேண்டும். வசனத்தைத் துண்டு துண்டாக வெட்டியும் எடுக்க முடியாது. அப்படி செய்தால், காட்சியின் வேகம் தடைப்பட்டுவிடும்.

எங்கள் இருவருக்குள் ஒரு சரியான அன்டர் ஸ்டாண்டிங் (Understanding) வைத்துக் கொண்டு, டைமிங் தவறாமல் பாவம் பிசகாமல், ஒரே ஷாட்டில் நடித்த காட்சி இது! மிக நன்றாக அமைந்தது. எத்தனை முறை பார்த்தாலும் மக்கள் இன்றும் அதைப் பாராட்டுகிறார்கள்.

### பெரியோர்களின் நல்லாசி

டி.எஸ்.என்: 'திருவருட்செல்வர்' படத்தில், நீங்கள் அப்பராக வேடம் தாங்கி, வந்த காட்சிகள் என்றும் மனதை விட்டு அகலாமல் இருப்பவை. அந்த வேடம் போடுவதற்கு உங்களுக்கு இன்ஸ்பிரேஷன் (Inspiration) காஞ்சி சங்கராச்சாரியரான 'பரமாச்சாரியாள்' தான் என்று ஒருமுறை குறிப்பிட்டிருந்தீர்கள் அதுபற்றி...


காஞ்சி பரமாச்சாரியார்

சிவாஜி: நான் முன்பே சொல்லியிருக்கிறேன். ஒரு நடிகனுக்கு நிறைய கவனிக்கிறதன்மை (Observation) வேண்டும் என்று. நான் என்னைச் சுற்றியுள்ள சூழ்நிலை, மனிதர்கள் எல்லோரையும் நன்றாகக் கவனிப்பவன். நான் அப்பராக வேடம்போடும்போது, ஒரு வயதான சிவனடியாருக்குரிய தோற்றம், நடையுடை பாவனை போன்றவற்றை என் நடிப்பில் காட்ட வேண்டுமல்லவா?

எனக்கு 'காஞ்சி பரமாச்சாரியாள்' மீது மதிப்பும், பக்தியும் உண்டு. அதற்கு ஒரு காரணம் உண்டு. அது ஒரு முக்கியமான சம்பவம். ஒருநாள், காஞ்சி முனிவர் பரமாச்சாரியாள் அவர்கள் என்னைக் கூப்பிட்டு அனுப்பியதாக, சங்கர மடத்திலிருந்து செய்தி வந்தது. அவர் மயிலாப்பூரில் உள்ள ஒரு மடத்தில் தங்கியிருந்தார். அந்த மடம், கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்திற்குப் பக்கத்தில் தான் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

நான் எனது தாயார், எனது தந்தையார், எனது மனைவி, நான்கு பேரும் சென்றோம். சென்றவுடன் எங்களை உள்ளே ஒரு அறையில் உட்கார வைத்தார்கள். நாங்கள் ஒரு அரை மணி நேரம் உட்கார்ந்திருந்தோம்.

காஞ்சி முனிவர் அங்கே மக்களுக்கு உபன்யாசம் செய்து கொண் டிருந்தார். அப்போது திடீரென லைட்டெல்லாம் அணைந்துவிட்டது. அவர் கையில் ஒரு சிறிய குத்துவிளக்கை எடுத்துக் கொண்டு, மெதுவாகப் பார்த்துக்கொண்டே வந்தார். மெல்லக் கீழே உட்கார்ந்து, கையைப் புருவத்தின் மேல் வைத்து எங்களைப் பார்த்தார். 'நீ தானே சிவாஜி கணேசன்' என்றார். 'ஆமாங்கய்யா! நான்தான்' என்று காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினேன். என் மனைவியும், பெற்றோர்களும் அவரை வணங்கினார்கள்.


'திருவிளையாடல்' படத்தில் நாகேஷுடன்...

அப்போது அவர் 'உங்களைப் பார்த்ததில் மிகவும் சந்தோஷம். திருப்பதி சென்றிருந்தேன். அங்கு ஒரு யானை எனக்கு மாலை போட்டது. யானை நன்றாக இருக்கிறதே யாருடையது?' என்றேன். 'சிவாஜி கொடுத்தது' என்றார்கள்.

திருச்சி சென்றிருந்தேன். அங்கு திருவானைக்கா கோயிலுக்குப் போனேன். அங்கு யானை மாலை போட்டது. யானை அழகாக இருக்கிறது. யானை யாருடையது? என்றேன்.

'சிவாஜி கணேசன் கொடுத்தது' என்றார்கள். தஞ்சை புன்னை நல்லூர் மாரியம்மன் கோயில் சென்றிருந்தேன். அங்கேயும் யானையை விட்டு மாலைபோட்டார்கள். இது யாருடையது? என்றேன். 'சிவாஜி கணேசன் கொடுத்தது' என்றார்கள். நாட்டில் பணக்காரர்கள் பல பேர் இருக்கிறார்கள். அவர்கள் பப்ளிசிட்டிக்காக சிலசமயம், கோவில்களுக்குப் பணம் தான் நன்கொடையாகக் கொடுப்பார்கள்.

'ஆனால், யானை கொடுப்பதற்குப் பெரிய மனசு வேண்டும். அந்த மனசு உனக்கிருக்கிறது. ஆகையால் உன்னைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். அவர்களுக்காக நான் பகவானைப் பிரார்த் தனை செய்கிறேன் என்று கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டார். அப்போது என் மனம் எப்படியிருக்கும்? எத்தனை அனுக்கிரஹம்! எண்ணிப் பாருங்கள்.


'பார் மகளே பார்' படத்தில் சௌகார் ஜானகியுடன்...(1963)

பொதுவாக எனக்கு வாழ்க்கையில் பயமே கிடையாது. காஞ்சி சங்கராச்சாரியார் போன்ற பெரிய முனிவர்களுடைய ஆசீர்வாதம் இருக்கும் போது, நான் எதற்காகப் பயப்பட வேண்டும்? ஒருவேளை இந்தச் சம்பவம் என் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கலாம். பரமாச்சாரியாளை நான் கூர்ந்து கவனித்திருக்கிறேன்.

எனவே, அது 'அப்பராக' பிரதிபலித்திருக் கலாம். இதுபோல என் வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களில் பல்வேறு மகான்களையும், ஆன்மீக புருஷர்களையும் சந்தித்து அருளாசி பெற்றிருக்கிறேன்.

சிருங்கேரி சங்கராச்சாரியார் , மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பங்காரு அடிகளார், சத்திய சாயி பாபா போன்றவர்களையெல்லாம் சந்தித்திருக்கிறேன். இந்த பாக்கியமெல்லாம் என் பெற்றோர்களின் ஆசியாலும், இறைவன் அருளாலும் எனக்குக் கிடைத்தது. (தொடரும்)

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் இலங்கை வருகை

(கொழும்பு)

நியூமோ கோக்கில் என்னும் நோயைப் பரப்பக்கூடிய வைரஸ் பற்றி முறையான ஆய் வொன்றை நடாத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் குழு வொன்று இலங்கை வந்துள்ளது.

இந்த வைரஸுக்கு எதிராக செயல்படக்கூடிய தடுப்பூசியை அறிமுகம் செய்வது உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி அவர்கள் ஆய்வு களை நடாத்தவுள்ளனர்.

மெலின்சைட்டிஸ், நிமோனியா ஆகிய நோய்கள் இந்த வைரஸி னால் பரப்பப்படுவதாகக் கண்டறி யப்பட்டுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளில் நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட நிமோனியா நோய் பற்றி இதுவரை இலங்கையில் முறையான ஆய்வொன்று மேற் கொள்ளப்படவில்லையென சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் நிகால் அபேசிங்க தெரிவித்தார். கொழும்பில் நடத்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் ஒருங்கிணைப் பாளர் தாமஸ் மரின்- உலகில் இடம் பெறும் மரணங்களில் மூன்றில் ஒருபங்கு தொற்றுநோய் காரணமாக இடம்பெறுவதாகக் கூறினார்.

2025ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கையை முடியுமான ளவு குறைப்பதே உலக சுகாதார ஸ்தாபனத்தின் குறிக்கோளாகும் என்றும் அவர் மேலும் தெரிவித் தார். (கு-7)

## தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சகல கட்டடத் திணைக்களங்களிலும் தற்போது நிலவும் இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கட்டடப் பணிப்பாளர் டபிள்யூ. எஸ். மொல்லிகொட தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் படவரைஞர்கள் ஆகியோர் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதுதொடர்பான போட்டிப் பரீட்சைகள் விரைவில் நாட்டின் 29 நகரங்களில் நடைபெறவுள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் இப்பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளது.

கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் உயர்தரப் பரீட்சையில் மூன்று கணிதத் துறைப் பாடங்களில் சித்தியடைந்துள்ள தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (கு-9)

## மாணவர் சேமிப்புக் கணக்குக்கு மக்கள் வங்கியின் சலுகை

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டு, முதலாம் ஆண்டில் கல்வி கற்க அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பெயரில் மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டால் முதன் முதலில் வைப்புச் செய்யப்படும் பெறுமதிக்கு சமனான தொகை மக்கள் வங்கியால் அக்கணக்கில் வைப்புச் செய்யப்படுமெனவும், வைப்புச் செய்யப்படும் 500 ரூபா வரையான தொகைக்கே இச் சலுகை வழங்கப்படுமெனவும் மக்கள் வங்கி தெரிவித்துள்ளது.

இதுவரை இத்திட்டத்தினால் பலன் பெறாதவர்களது நலனை முன்னிட்டு இத் திட்டம் இம்மாதம் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனவும் இச் சலுகைகளைப் பயன்படுத்தி இதுவரை இவ் வங்கியில்சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்காத மாணவர்கள் ஆரம்பிக்கலாம் எனவும் வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (கு-132, 133)

## காளிமுத்துவின் கருத்துக்கு கருணாநிதி பதிலடி!

தமிழீழம் வேண்டாமென் போரின் பிறப்பில் சந்தேகப்படு கிறேன் என்றவர்தான் முன்னாள் அமைச்சரும் அண்ணா தி.மு.க. தலைவருமான கா.காளிமுத்து என்றுதி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தி.மு.க .தலைவர் கருணாநிதியிடம் 'கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும்' என்ற தலைப்பில் தி.மு.கவின் உத்தியோகபூர்வ ஏடான முரசொலி வெளியிட்டுள்ள செய்தியில்,

மேலவையில் சில மாதங்கள் உறுப்பினராக இருந்தீர்களே. அப்போது முக்கிய நிகழ்ச்சி ஏதாவது நினைவிருக்கிறதா? என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த கருணாநிதி அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இலங்கைத் தமிழர்களுக்காக நன்கொடைகள் அளித்து பல உதவிகள் செய்து கொண்டே, 'தமிழ் ஈழத் தனி நாட்டை ஆதரிக்கமாட்டேன்' என்று கூறியதைச் சுட்டிக்காட்டி, அதேசயம் அமைச்சராக இருந்த காளிமுத்து எழுதிய ஒரு நூலில் 'தமிழீழம் வேண்டாமென்போர் பிறப்பில் சந்தேகப்படுகிறேன்' என்று குறிப்பிட்டிருந்ததையும் அவையில் எடுத்துப் படித்துக் காட்டியதுதான் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும் என்று தெரிவித்துள்ளார் என்றுள்ளது. (கு)

## இன்று மின்தடை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சாரசபை- யாழ்.பிரதேச செயலகம் மின் பராமரிப்பு வேலைகளைச் சீர்செய்யும் பொருட்டு, இன்று காலை 9மணி முதல் மாலை 5மணி வரை பின்வரும் இடங்களில் மின்விநியோகம் தடைப்படும்என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத் தந்துள்ளது.


இதற்கமைவாக புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகியவற்றில் மின்தடைப்படும்.

இப்பிரதேசங்களில் மின் பராமரிப்பு வேலைகள் விரைவாக முடிவுற்றால் மேற்குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு முன்பு மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது. (கு-7)

# தீவிரவாதிகளின் தாக்குதல் குறித்து அமெரிக்காவை எச்சரித்த சதாம்

(வோஷிங்டன்)

அமெரிக்கா மீது தீவிரவாதிகள் தாக்கு



தல் நடத்தலாம் அணு ஆயுத தாக்குதல் நடப்பதற்கும் வாய்ப்பு உள்ளது என 1990ஆம் ஆண்டுக்கு முன்பே சதாம் உசேன் எச்சரிக்கை விடுத்திருந்தார். என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இதை உறுதி செய்யும் வகையில் சதாமின் உரையாடல் பதிவு செய்யப்பட்டதற்கான ஆதாரம் தற்போது ஏ.பி.சி நியூஸ் செய்திநிறுவனத்திற்கு கிடைத்துள்ளது.

ஒட்டு மொத்தமாக மக்களை அழிக்கும் ஆயுதங்களுடன் தீவிரவாதம் வருகிறது. என்ற தகவலை பிரிட்டனிடம் சொல்லிவிட்டேன் . எதிர்காலத்தில் வாஷிங்டனில் மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடத்தில காரில் மறைத்து வைக்கப்பட்டு இருக்கும் அணு குண்டு வெடிக்கலாம் நாசகார கிருமிகளை பரவச் செய்யும் வெடிகுண்டுகள் இரசாயன வெடி குண்டுகள் கூட வெடிக்கலாம் ஆனால் இந்த தாக்குதலில் ஈராக்குக்கு தொடர்பு கிடையாது என்று அதில் சதாம் உசேன் கூறியுள்ளார்.

கடந்த, 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் திகதி குவைத் நாட்டை சதாம் உசேன் தாக்கினார். அந்த திகதியைத் தான் சதாம் தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளார். எனவே அமெரிக்கா மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற தகவலை 1990ஆம் ஆண்டுக்கு முன்பே சதாம் உசேன் தெரிவித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

தற்போது இந்த ஒலி நாடா ஆதாரம் ஏ.பி.சி நியூஸ் என்ற செய்தி நிறுவனத்திடம் கிடைத்துள்ளது. ஐ.நா.ஆய்வு குழுவை சேர்ந்த பில் டீர்னி என்பவர் இந்த ஒலி நாடாவை செய்தி நிறுவனத்திடம் கொடுத்துள்ளார்.

இது தவிர மற்றொரு ஒலிநாடாவும் டேப்பும் இந்த செய்தி நிறுவனத்திடம் உள்ளது. அதில் உள்ள உரையாடல் 1995ஆம் ஆண்டுஏப்ரல் அல்லது மே மாதம் பதிவு செய்யப்பட்டதாக கருதப்படுகிறது.

அழிவைஏற்படுத்தும் வெடிகுண்டுகளை ஐ.நா.ஆய்வு குழுவினர் பார்வையில் இருந்து மறைப்பது எப்படி என்பது குறித்து சதாம் உசேனின் மருமகன் உசேன் கமால் பேசியுள்ளமை இதில் செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஒலி நாடாக்களையும் செய்தி நிறுவனம் விரைவில் வெளியிடவுள்ளது. (து)

# சீனப் பெருஞ்சுவரை பாதுகாக்க ரோந்துக் குழு

உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான சீனப்பெருஞ்சுவரை பாதுகாக்க முதல் முறையாக சீன அரசு ரோந்து குழுவை அமைத்துள்ளது. சீனாவில் அமைந்துள்ள உலக அதிசயங்களில் ஒன்றான பெருஞ்சுவர் ஏழு ஆயிரம் கி.மீ நீளம் உடையது. பழமையான சீன நாகரிகத்திற்கு சான்றாக உள்ள அற்புதமான இந்த சுவரை பொது மக்கள் விளையாட்டாக சேதப்படுத்துவதை தடுக்க முதல் முதலாக சீன அரசு ஒரு ரோந்து குழுவை அமைத்துள்ளது.

இந்த குழுவில் பெரும்பாலும் பெருஞ்சுவருக்கு அருகே வசிக்கும் கிராமவாசிகளே உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுக்கான ஊதியத்தை உள்ளூர் நிர்வாகங்களே வழங்கும்.

- பெருஞ்சுவரை பார்வையிட வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதால் இதைப் பாதுகாக்க, முதல் முதலாக இந்த ரோந்து குழு அமைக்கப்பட்டுள்ளது என்று பீஜிங் நகராட்சி இணை இயக்குநர் யு.பிங் தெரிவித்தார். (து)

# தீவிரவாதிகளின் முகாம்களை பாகிஸ்தான் மூடவேண்டும்

## அமெரிக்கா உத்தரவு

(வாஷிங்டன்)

காஷ்மீர் எல்லையில் தீவிரவாதிகளின் முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அரசு ஆதரவு அளித்து வருகிறது. காஷ்மீரிலும் இந்தியாவின் பல்வேறு இடங்களிலும் தீவிரவாதிகள் நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

பாகிஸ்தானின் செயலை அமெரிக்கா பெயரலவுக்கே கண்டித்து வருகிறது. இதனால் பாகிஸ் தான் தொடர்ந்து தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுக்கிறது. தற்போது தீவிரவாதிகளின் முகாம்களை மூடுமாறு பாகிஸ்தானுக்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள் ளது.

இது தொடர்பாக தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணை மந்திரி ரிச்சர்டு பவுச்சர் கூறுகையில்,

செப்டம்பர் 11ஆம் திகதி அமெரிக்க இரட்டைக் கோபுரக்கட்டடங்கள் தகர்க்கப்பட்ட பின்பு அமெரிக்கா தீவிரவாதத்துக்கு எதிராக குரல்கொடுத்து வருகிறது.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகும் பாகிஸ்தான்-காஷ்மீர் எல்லையில் தீவிரவாத முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. பாகிஸ்தான் அதிபர் முஷரப் தனது போக்கை மாற்றி தீவிரவாத முகாம்களை உடனடியாக மூடவேண்டும்.

இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கட்டுப் பாட்டுக்கோட்டை மதிக்க வேண்டும். எல்லையில் செயல்படும் தீவிரவாதிகளின் முகாம்கள் மூடப்படவேண்டும். இதை அமெரிக்கா திரும்ப திரும்ப வலியுறுத்தி வருகிறது.

மேலும் பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகள் செயல்படுவதையும் முஷரப் அனுமதிக்க கூடாது என்றார். (து)

# சீனாவில் திடீர் வெள்ளப் பெருக்கு ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு

(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கு காரணமாக ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ளது சின்ஜியாங் உய்குர் மாகாணம். இந்த மாகாணத்தின் நான்கு நகரங்களில் கடந்த இரண்டுவாரங்களாக அதிக வெப்பம் வாட்டி எடுத்தது. இதைத் தொடர்ந்து 11ஆம் திகதி முதல் இரண்டு நாட்கள் கடுமையான பனி மற்றும் மழை பொழிந்தது.

இதன் காரணமாக அந்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. 11 ஆயிரத்து 226 பேர் வெள்ளத்தில் சிக்கினர். ஆறாயிரத்து 427வீடுகள் சேதமடைந்தன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இரண்டாயிரத்து 900 பேர் மாற்று இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் வளர்ச்சியடையாத பகுதியாகும். இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மண் மற்றும் மரத்தாலான வீடுகளில் வசிக் கின்றனர். கடந்த 1950மற்றும் 1960ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட இந்த வீடுகள் மிகவும் மோசமான நிலையில் இருந்தன. வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீட்பு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மீட்புக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. (து)

# தீவிரவாதத் தடைச்சட்டம் இங்கிலாந்தில் நிறைவேறியது

இங்கிலாந்து நாட்டில் தீவிரவாதத்தை பெருமைப்படுத்துவதை தடுக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 315 எம்.பிக்கள் ஆதரவாகவும் 277 எம்பிக்கள் எதிர்த்தும் வாக்களித்தனர்.

ஆளும்கட்சி எம்பிக்களின் மொத்த வாக்கில் 38 குறைந்துள்ளது.

தீர்மானம் வெற்றி பெற்ற பிறகு கருத்துத் தெரிவித்த பிளேர் இந்த நாட்டில் பேச்சு சுதந்திரம் உள்ளது. ஆனால் அதை தவறாகப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டார். (து)

# சீனக் கடற்பிராந்தியத்தில் பயணிகள் கப்பல் மூழ்கியது

## 37 மாலுமிகளைக் காணோம்

நேற்று முன்தினமிரவு சீனக்கடல் பிராந்தியத்தில் பயணித்துக்கொண்டிருந்த கப்பல் ஒன்று மூழ்கியதில், 37மாலுமிகள் காணாமல் போயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் மூழ்கியதையடுத்து கப்பலில் இருந்தவர்களைக் கண்டுபிடிக்க விஷேட தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இந்தக் கப்பலில் இருந்த மாலுமிகளை உயிருடன் மீட்பது மிகவும் சிரமம் என்றும் இருந்த தெரியவருகிறது. இந்தக் கப்பல் இந்தோனேசியா நோக்கி சென்று கொண்டிருக்கின்ற போதே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கு-7)

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; எரிவாயு குழாய் கடும் சேதம்!

(குவெட்டா)

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள பிர்கோ எரிவாயு கிணற்றில் நேற்று முன்தினம் அதிகாலை திடீரென குண்டுவெடித்தது. இதனால் அங்கிருந்து எரிவாயு எடுத்துச் செல்லும் குழாய் சேதம் அடைந்து பல நகரங்களுக்கு எரிவாயு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து அரச அதிகாரி அப்துல் அகமது லசி கூறுகையில்,

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பிர்கோ எரிவாயு கிணற்றின் அருகே நேற்று முன்தினம் அதிகாலை குண்டு வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் உயிர்ப் பலியோ, காயமோ யாருக்கும் ஏற்ப வில்லை. ஆனால் இங்கிருந்து எரிவாயு நிலையத்திற்கு எரிவாயு கொண்டு செல்லும் குழாய் முற்றிலும் சேதமடைந்துள்ளதால் கிழக்கு பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த முல்தான், பகவல்பூர் மற்றும் பைசலாபாத் ஆகிய நகரங்களுக்கான எரிவாயு விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த எரிவாயுக் குழாய் விரைவில் சரிசெய்யப்பட்டு மீண்டும் விநியோகத்தை தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வரும் இப்பகுதியைச் சேர்ந்த பழக்குடியினரே இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம். குறிப்பாக பாதுகாப்புப் படையினர் இப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பழக்குடியினர் கண்ணி வெடிகளை வைத்திருக் கலாம் எனவும் நம்பப்படுகிறது என்றார். (து)



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் கார் பந்தயம் நடக்கும் இடத்தில் ஒருவர் மிகச்சிறிய ஸ்கூட்டரை ஓட்டி வந்தார்.

# பெனாசீர் பூட்டோவின் கணவர் ஜர்தாரிக்கு பிடிவிறாந்து உத்தரவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ இவரது கணவரால் ஆசிப் அலி ஜர்தாரி இவர்கள் இருவர் மீதும் பாகிஸ்தான் அரசு பல்வேறு வழக்குகள் தொடுத்துள்ளது.

நவாப் செரீப் பிரதமராக இருந்த போது பெனாசிர் தனது கணவர் ஜர்தாரியுடன் பாகிஸ்தானைவிட்டு வெளியேறினார். அவர்கள் மீதான வழக்கு பாகிஸ்தான் நீதிமன்றில் நடந்து வருகிறது. வழக்கு தொடர்பாக சர்வதேச பொலிஸில் மூலம் நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

ராவல் பிண்டி நீதிமன்றில் பெனாசீர் கணவர் மீது சொத்து குவிப்பு வழக்கு விசாரணை நடந்துவருகிறது. கடந்த புதன்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. நீதிபதி காலித் முகம்மது வழக்கை விசாரித்து சொத்து குவிப்பு வழக்கில் ஜர்தாரியை குற்றவாளியாக அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து ஜர்தாரிக்கு எதிராக நீதிமன்று கைதுவிறாந்து பிறப்பித்துள்ளது. எனவே ஜர்தாரியை கைதுசெய்யும் நடவடிக்கையில் பாகிஸ்தான் அரசு இறங்கியுள்ளது. இப்பொழுது ஜர்தாரி எந்த நாட் டில் தங்கி இருக்கிறார் என்று தெரியவில்லை. சர்வதேச பொலிஸ் உதவியை பாகிஸ்தான் அரசுகோருகிறது. (து)

நாம் எதை இழந்து விட்டாலும் கௌரவத்தை யிழக்க இடம் தரக்கூடாது.

-சாக்ரட்டீஸ்

வலம்புரி

## இலங்கையின் எதிர்காலம் ஜெனீவாவில் தீர்மானிக்கப்படும்

யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஜெனீவாவில் இடம் பெறவுள்ளது.

பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக விடுதலைப்புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் நேற்றைய தினம் ஜெனீவாவுக்குப் புறப்பட்டுள்ளனர்.

நடைபெறப்போகும் பேச்சுவார்த்தை யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பானது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை முறையாக-முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் போதே சமாதானப் பேச்சுக்கள் பற்றி சிந்திக்க முடியும் என்பது விடுதலைப்புலிகளின் அறிவிப்பு.

இதற்கு அரசும் இணங்கி கொண்டுள்மைக்கு அமைவாகவே ஜெனீவாப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை முறையாக அமுல்படுத்துவதன் ஊடாகவே தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்த முடியும் என்பதும், தமிழ் மக்களின் வாழ்வியலில் இயல்பு நிலை ஏற்படாதவிடத்து சமாதானப் பேச்சுவார்த்தையும் சாத்தியமற்றுப் போகும் என்பதும் விடுதலைப்புலிகளினால் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் உறுதிப்பட தெரிவிக்கப்பட்டுள்ளது.

22,23ஆம் திகதிகளில் நடைபெறப்போகும் பேச்சுக்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதாகவிருந்தாலும் அதுவே இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் பேச்சுவார்த்தை என்பது இங்கு கவனிக்க வேண்டிய விடயமாகும்.

ஜெனீவாப் பேச்சுக்களே சண்டையா? சமாதானமா? என்பதைத் தீர்மானிக்கப் போகின்றது என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

எனவே ஜெனீவாவில் இடம்பெறப்போகும் பேச்சுக்கள் குழம்புமாயின் மீண்டுமோர் பேச்சுக்கான சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாதென்பது இங்கு நினைவிற்குக் கொள்ளப்படவேண்டிய விடயம். எனவே நாட்டில் சண்டையா? சமாதானமா? என்பதைத் தீர்மானிக்கப் போகும் ஜெனீவாப்பேச்சுக்களில் அரசின் விட்டுக்கொடுப்புக்கள் அதிகமாகவிருக்க வேண்டும். இல்லையேல் மீண்டுமோர் யுத்தம் வெடிப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

# கேலிச் சித்திரத்தில் முகம்மது நபி புத்தளத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(புத்தளம்)

முஹம்மது நபியை கேலிச் சித்திரம் வரைந்து, முஸ்லிம்களை சினம் கொள்ளச் செய்த டென்மார்க் ஊடக நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக புத்தளம் மக்களினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட கடையடைப்புடன் கூடிய ஹர்த்தாலினால் அங்கு இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

புத்தளம் மொஹிதீன் ஜும் ஆப் பள்ளிவாசலின் தலைமையிலான பல அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து, இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தன.

இதனால் நகரின் சகல வர்த்தக நிலையங்கள் , தமிழ், முஸ்லிம் பாடசாலைகள், அரச, தனியார் வங்கிகள் என்பன மூடப்பட்டதுடன், பயணிகள் போக்குவரத்துச் சேவை உட்பட முச்சக்கர வண்டிகளின் சேவைகளும் முற்றாக செயலிழந்தன.

இந்த ஹர்த்தாலினையடுத்துத அரசாங்க நிறுவனங்களுக்கான அதிகாரிகளின் வருகை குறைந்து காணப்பட்டது.

நகரின் சகல பகுதிகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு மக்கள் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அதேவேளை நேற்றைய தினம் தொழுகையின் பின்னர் புத்தளம் நகர் மையத்திலிருந்து பேரணியாக புறப்பட்ட மக்கள் குருநாகல் வீதிவழியாக நகரின் பல பாதைகள் ஊடாக கண்டனக் கூட்டம் இடம்பெற்ற இடத்தை வந்தடைந்தனர்.

பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும் புண்படுத்தும் வகையில் வகைியில் செயற்படுவோர் தண்டிக்கப்படக் கூடியவர்கள், மதங்களை ஏளனப்படுத்துவதா ஊடகச் சுதந்திரம் என்பன போன்ற பதாகைகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்திச்சென்றனர்.

நகரின் பல பகுதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டன. நகரில் ஒரு சில பொலிஸார் ஆயுதத்துடன் காணப்பட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் மொகதீன் ஜும் ஆப்பற்றித ஜமாதே இஸ்லாம், சமிஈயத்துல் உலமா சபை, வர்த்தக சங்கம், வாகனச்சங்கம் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் முன்னாள் நகர சபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (கு-15,9)

## யோகாசன தியான வகுப்பு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்கை யோககேந்திரா நிலையம் சுக வாழ்விற்கான யோகாசன தியான வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இப் பயிற்சியில் மனிதனின் உடல், உள, ஆத்மீக முன்னேற்றத்திற்கான பயிற்சி வழங்கப்படும். இதன்போது நோயாளர்களுக்கும் மாணவர்களுக்கும் விஷேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஆண், பெண் இருபாலாருக்கும் நடாத்தப்படும் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் எதிர் வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்குமுன் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

இப் பயிற்சிகள் கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியிலுள்ள அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளன. இப் பயிற்சி முடிவில் சிவலிங்க யோககேந்திர நிலையத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (கு-132,133)

## சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 159 ஆவது ஆராதனை விழா

(நல்லூர்)

இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 159 ஆவது ஆராதனை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை ஒரு முழு நாள் நிகழ்ச்சியாக இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் மகாராணி க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிமுதல் 10.00 மணி வரை ஈழத்து முதுபெரும் கலைஞர்களும் இளங்கலைஞர்களும் அணி செய் இசைக்கலைஞர்களும் இணைந்து நடாத்தும் பஞ்சரத்தினக் கீர்த்தனை ஆராதனை இடம்பெறும்.

10.00 மணி முதல் 12.30 மணிவரை ஈழத்தின் முதுபெரும் நாதஸ்வர - தவில்வித்துவான்கள் இணைந்து வழங்கும் நாதாஞ்சலி இடம்பெறும்.

12.30 மணி முதல் 1.30 மணிவரை கொழும்பு திருப்பதி ஸ்ரோஸ் அனுசரணையுடன் நடைபெறும் மதிய போசனத்தைத் தொடர்ந்து பி.ப.1.30 மணி முதல் 5.30 மணி வரை ஈழத்து இசை விற்பனர்கள் சிறந்த பக்கவாத்திய சகிதம் வழங்கும் இசை அர்ச்சனை இடம்பெறும். (து)

## தூறல் நீர்ப்பாசனம்

(மருதங்கேணி)

வடமராட்சி பகுதி விவசாயிகள் எட்டுப் பேர்களுக்குக் கடந்த வருடம் யு.என்.டி.பி திட்டத்தின் கீழ் தூறல் நீர்ப்பாசனத்தை மேற்கொண்டதன் காரணமாக உற்பத்தி அதிகரிக்கப்பட்டதனால் மேலும் பலர் இவ் வருடம் இந்தத்தூறல் நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

யு.என்.டி.பி திட்டத்தின் கீழ் இவ் வருடம் 17 பேருக்கு தூறல் நீர்ப்பாசன வசதி வழங்குவதற்கு வடமராட்சி பெரும்பாக உத்தியோகத்தர் சதாசிவம் உருத்திரேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார். (கு-35)

## விவசாயிகளுக்கு உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி பகுதியில் யு.என்.டி.பி திட்டத்தின் கீழ் ஐந்து கிராம விவசாயிகளுக்கு அரிவு வெட்டும் இயந்திரம் மற்றும் சூடு அடிக்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் இவ் வருடம் கரணவாய் மத்தி, கரணவாய் கிழக்கு, அம்பன், குடத்தனை, கரணவாய் மேற்கு ஆகிய கிராம விவசாயிகளுக்கு அரிவுவெட்டும் இயந்திரம், சூடுஅடிக்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாக வடமராட்சி பெரும்பாக உத்தியோகத்தர் சதாசிவம் உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

(கு-35)

## ஆக்கபூர்வமான பங்களிப்பை வேட்பாளர்கள் வழங்க வேண்டும்

(கொழும்பு)

சகல கிராம அபிவிருத்தித் திட்டங்களும் நிறைவேற்றப்படுவதற்கு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தங்களது ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டுமென்று இலங்கை மன்றக் கல்லூரியின் தலைவரும், சட்டத்தரணியுமான பந்துலவெல்லாவல தெரிவித்தார்.

வாக்களிப்பு மூலம் தெரிவுசெய்யப்படும் சகல பிரதிநிதிகளினதும் தலையாய கடமை மக்களுக்கு சேவையாற்றுவது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிக எண்ணிக்கையான பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில், நாட்டின் அரசியல் மாற்றப்பட வேண்டுமென்றும் மேலும் தெரிவித்தார். (கு-7)

## தொழில் வல்லுநர் பயிற்சித் திட்டம்

(கொழும்பு)

நாட்டில் சுயதொழில் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் முகமாக நாடளாவிய ரீதியில் தொழில் வல்லுநர் பயிற்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், சர்வதேச தொழில் அமைப்புடன் இணைந்து இதனை நடைமுறைப்படுத்தவுள்ளது.

திணைக்களத்தின் ஆணையாளர் எச்.எல். திரேசா இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் - கொழும்பிலுள்ள சனச வங்கி, குருநாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மூலம், இதன் முதற் கட்டத்தின் போது வேலையில்லா இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படவிருப்பதாகக் கூறினார்.

இதேவேளை பின்தங்கிய கிராமங்களில் உள்ளவர்கள் சுயதொழிலில் ஈடுபடும் முகமாக சலுகை அடிப்படையில் கடன்களை வழங்கும் நடவடிக்கைகளிலும் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

மக்களின் சேமிப்பை அடிப்படையாக வைத்து, இந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-7)

## இலவச விநியோகம்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தென்னங்கன்றுகள், உரம் முதலியனவற்றை இலவசமாக வழங்குவதற்குத் தென்னை உற்பத்தி திணைக்களம் முன்வந்துள்ளது.

மேற்படி பிரதேசத்தில் 8 பரப்பு காணியுள்ளவர்களுக்கு இலவசமாக இவற்றை வழங்குவதற்கு தென்னை உற்பத்தி சங்கம் முன்வந்துள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு புலோலி கமநல சேவை நிலையத்தில் அல்லது தென்னை உற்பத்தி அதிகாரி எஸ்.சத்தியேந்திரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

(கு-35)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



'நான்' என்பதை ஒழித்துவிடு. இழந்து விடு. மறந்துவிடு. இறைவன் அவனுடைய செயல்களைச் செய்துகொள்ளட்டும். இது அவனுடைய கடமை. ஒதுங்கி இருப்பதைத் தவிர வேறு வேலை எதுவும் நமக்கு இல்லை. இறைவனது செயல் நிகழட்டும்.

சுவாமி விவேகானந்தர்







கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுதலை செய்யக்கோரி நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் மாவட்ட அரச அதிபர் இராசநாயகத்திடம் மனுக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட இப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

# சகலரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு

விடுதலைப்புலிகளுடன் கடந்த 3 ஆண்டுகளாகத் தடைப்பட்ட சமாதானப்பேச்சுவார்த்தைகள் புதிய அணுகுமுறையில் ஆரம்பிக்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சகலரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும் என்பது பொதுவான கருத்தாகும்.

ஜெனீவாச் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரசாங்கக் குழு நாட்டின் கௌரவம், இறைமை என்பவற்றை பாதுகாக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-39)

## மகிந்தவின் சிந்தனையின்...

கோமின் தயாசிறி மற்றும் பாலித கோகென்ன ஆகியோர் இடம்பெற்றுள்ளதால் நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் அளித்தே அவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்துவர் என்றும் மகிந்த சுட்டிக் காட்டியுள்ளார்.

தான் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் ஜே.வி.பியின் இணக்கத்திற்கு ஏற்பவே மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் தனித்துப் போட்டியிட்டாலும் இரு கட்சிகளுக்கும் இடையே மோதல் ஏற்படாதவாறு செயற்படுவது குறித்தும் மகிந்தவும் ஜே.வி. பி.குழுவினரும் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதேவேளை அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையிலான நேரடிப்பேச்சுக்கள் எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதியின் திடீர் அறிவிப்புகள் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ச)

## நான்கு போராளிகள் விடுதலை...

ணைக்கு வந்தது.

விசாரணையின் போது பொலிஸ் பிரதி ஆய்வாளர் சேரசிங்க நீதிமன்றில் முன்னிலையானார்.

நான்கு போராளிகள் மீது முதலில் சாதாரண வழக்கின் கீழ் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன என்றும் அதன்பின்னர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் இந்த வழக்கு மாற்றப்பட்டதென்றும் தெரிவித்தார்.

தற்போது சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் நான்கு பேர் மீதான வழக்கும் சாதாரண சட்டத்தின் கீழ் மாற்றப்பட்டுள்ளது.

இருந்தபோதும் நான்கு போராளிகளின் பிணைமனுமீது பொலிஸார் ஆட்சேபனை எதனையும் தெரிவிக்கவில்லையென்றும் சேரசிங்க நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார். இவ்மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி ராமகமலன் போராளிகள் நான்கு பேரையும் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

ஒவ்வொரு போராளியும் ரூபா.2ஆயிரத்து 500 ரொக்கம் மற்றும் ரூபா.20 ஆயிரத்திற்கான சொத்துப் பிணை ஆகியவற்றை செலுத்தவும் நீதிபதி உத்தரவிட்டார்.

திருகோணமலைத்துறைமுகம் பொலிஸ் நிலையத்தில் வாரம் ஒருமுறை நான்கு பேரும் முன்னிலையாகவேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

பிணையில் விடுதலையான நான்கு போராளிகளும் திருகோணமலை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்திடம் கையளிப்பதற்காக வான்மூலம் கிளிநொச்சிக்கு அழைத்து வரப்பட்டனர்.

போராளிகள் பயணம் செய்த வானுக்கு பாதுகாப்பாக பொலிஸார்இரண்டு வாகனங்களில் பயணித்ததாகக் கண்காணிப்புக்குழு தெரிவித்தது.

இதேவேளை நல்லெண்ண நடவடிக்கையாக தமிழீழ நீதிமன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இரு பொலிஸார் இன்று விடுதலையாகலாமென தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பொன்னம்மானின்...

தமிழீழ விடுதலைப்புலிகளின் பாசறையொன்றில் இந் நிகழ்வு நடைபெற்றது. 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நாவற்குழி இராணுவ படைத்தளம் மீதான தாக்குதல் ஒன்றிற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது மூத்த தளபதி லெப். கேணல் பொன்னம்மான் உட்பட 10 போராளிகள், நாட்டுப்பற்றாளர் ரஞ்சன் ஆகியோர் வெடி விபத்தில் வீரச்சாவடைந்தனர்.

## யுத்தநிறுத்த ஒப்பந்த நடைமுறையே...

மக்களுக்கு ஒரு இயல்பு நிலையைக் கொடுக்க வேண்டுமென தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இருப்பினும் சர்வதேச சமூகத்தினுடைய எதிர்பார்ப்பிற்கும் வேண்டு கோளுக்கும் மதிப்பளித்து எமது தலைவரும், நோர்வேயின் சிறப்புத் தூதுவரும் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் அவர்களும் சந்தித்து இணக்கம் காணப்பட்டதையடுத்து பேச்சுகளுக்குச் செல்கின்றோம்.

அண்மைக்காலமாக அரசதரப்பினர் வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் தமிழர் தரப்புக்கும் தாயகக் கோட்பாட்டுக்கும் எதிரானவையாக உள்ளன.

படைத்தரப்பு கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற வன்முறை குறிப்பாக மனிதாபிமான தொண்டர்கள் கடத்தப்பட்டது, எமது போராளி கொலை செய்யப்பட்டது போன்ற பல்வேறு நிகழ்வுகள் இக்காலப்பகுதியில் நிகழ்ந்துள்ளன.

கடத்தப்பட்ட அப்பாவி மனிதாபிமானப் பணியாளர்கள் விடுவிக்கப்படவில்லை. மோசமான நடவடிக்கைகளை சிறிலங்காப் படைத் தரப்பு செய்தவண்ணம் உள்ளது என தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டினார்.

ஜெனீவாச் சந்திப்பென்பது எமது தலைவர் வலியுறுத்தியதன்படி எமது மக்களுக்கு முதலில் இயல்பு நிலை வரவேண்டும். எங்கள் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்ற இராணுவ வன்முறை, இராணுவ அச்சுறுத்தல் நீங்கி, எங்களுடைய தாயகத்தில் ஆக்கிரமிப்புப்படைகள் தமது ஆக்கிரமிப்புக்களை விலக்கிக்கொள்ளவேண்டும்.

யுத்த நிறுத்த உடன்பாட்டில் இது தொடர்பாக பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இது யுத்த நிறுத்த ஒப்பந்தம் செம்மையாக நடைமுறைப்படுத்துவதுதான் ஜெனீவாப் பேச்சுக்களின் முக்கிய கருப்பொருளாக இருக்கும்.

யுத்த நிறுத்த உடன்பாடு நடை முறைக்கு வந்த பின்னர் தான் அடுத்த கட்டம் தொடர்பாக எமது தலைமைப்பீடம் சிந்திக்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

கடந்த நான்கு வருடகாலங்களில் அரச தரப்பு மேற்கொண்ட சீர்குலைவு நடவடிக்கைகள் உட்பட அண்மைக்காலத்தில் இடம் பெற்ற மோசமான செயற்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை பேச்சுவார்த்தையில் வலியுறுத்துவோம்.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளில் கருணா குழு,ஈ.பி.டி.பி.குழு,தேச விரோதக் குழுக்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை.

ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களைப்பட்டு வடக்கு -கிழக்குக்கு வெளியே ஆயுதக் குழுக்கள் வெளியேற்றப்படவேண்டும் என்பதுதான் தெளிவாகச் சொல்லப்பட்டுள் ளது.

இதில் கருணா குழு ,டக்ளஸ் குழு என்று ஒரு குழுவையும் வரையறுத்துச் சொல்லவில்லை. இது பற்றிப் பேசுபவர்கள் ஒப்பந்த விதி முறைகளைப் பார்க்காமல் கதைப்பவர்களாகத்தான் இருக்கமுடியும்.

இது ஒரு முட்டாள் தனமான கருத்தாகத் தான் இருக்கும். சிறிலங்கா அரசாங்கம் ஆயுதக்குழுக்களை வைத்து குழப்பத்தை விளைவிக்கத்தான் போகிறார்கள் என்றால் அதன் எதிர்விளைவுகளின் தாக்கத்தை உணர்ந்து கொள்ளும் சூழல்தான் உருவாகும் என்றார்.

இதேவேளை போர்நிறுத்த உடன்பாட்டில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதா என தமிழ்ச்செல்வனிடம் கேட்டபோது;

போர்நிறுத்த உடன்பாட்டில் மாற்றங்கள் செய்யவேண்டிய அவசியமே இல்லை. அவ்வுடன்பாட்டில் தெளிவாக எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இரு தரப்பும் சர்வதேச முயற்சிகளின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட உடன்பாடு அவ்வுடன்பாட்டைப் பார்த்து வாசித்து நடைமுறைப்படுத்த முற்பட்டாலே கருணா குழு உட்பட சகல ஆயுதக் குழுக்களுக்கும் முடிபு கட்டப்படும் என்றார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு வேறு ஐரோப்பியநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளுமாறு ஒரு சில நாடுகள் அழைத்திருப்பதாகவும் ஜெனீவாப் பேச்சுவார்த்தை முடிந்த கையோடுதான் அது குறித்து முடிவெடுக்கப்படுமெனவும் தமிழ்ச்செல்வன் கூறினார். (ச)

## தமிழ்ச்செல்வன் தலைமை...

அரசுடன் ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சில் கலந்து கொள்வதற்காக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், மட்டக்களப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் அரசியல் துறையைச் சேர்ந்த செல்வி ஆகியோர் உள்ளிட்ட 11 பேர் அடங்கிய குழுவினரே நேற்று ஜெனீவா பயணமாகினர்.

நேற்றுக் காலை ஜெனீவா செல்லும் குழுவினரை தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பலர்அவர்களை கிளிநொச்சிப்பொது விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கிருந்து காலை 10 மணிக்கு விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றனர். அதேவேளை சமாதானச் செயலகப் பணிப்பாளர்புலித்தேவன் மற்றும் செல்வி ஆகியோர் தரைவழியூடாக கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் கொழும்பைச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளின் வருகையை ஒட்டி விசேட பயிற்சி பெற்ற இராணுவத்தினர் கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சூழவும் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தரைவழியாக விமானநிலையத்தைப் புலித்தேவன் சென்றடைந்ததும் புலிகள் குழுவினர் பிற்பகல் 4.15 மணியளவில் ஏயார்லைன்ஸ் விமானம் மூலம் ஜெனீவாக்குப் புறப்பட்டனர்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் பேச்சுக்குழுவிற்கு தலைமைவகிக்கும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அவரது பாரியார் அடேல் பாலசிங்கம் ஆகியோர் இன்று லண்டனிலிருந்து ஜெனீவாவுக்குப் புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சீராக அமுல் படுத்துவது குறித்து எதிர்வரும் 22,23 ஆம் திகதியில் ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9,39)









இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 18.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.